RE/MAX REALTOR BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 24 மார்ச் 2023 இதழ்:- 48

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை கலைமாமணி ராஜேஸ் வைத்தியாவின் இசைச்சங்கமம்

## தமிழினப் படுகொலையை அங்கீகரிப்பது அவசியமானதென அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் ஒலித்த குரல்!


இலங்கையில் நடந்த தமிழ் மக்கள் மீதான இனப்படு கொலையை அங்கீகரிப்பது அவசியம் என்று அவுஸ்திரேலியாவின் பாரளுமன்றத்தில் அதன் உறுப்பினர் லிடியா தோர்ப் 21 மார்ச் 2023 திங்கட்கிழமை வலியுறுத்தினார். அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினரான லிடியா தோர்ப் ஆற்றிய உரையில், இலங்கையில் நடந்த இனப்படுகொலையை அங்கீகரிப்பது அவசியம். அகதிகளுக்கு எதிரான அவர்களின் சித்திரவதை வடிவங்களையும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை இனப்படுகொலைக் குற்றங்களில் அவர்கள் மெத்தனமாக இருப்பதையும் ஒப்புக் கொள்ளுமாறு (9ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில்அவதானம் செலுத்தாத சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகள் குறித்து ஹரி ஆதங்கம்!



இலங்கைக்கான நிதியுதவிச் செயற் திட்டத்துக்கு அனுமதியளித்திருக்கும் சர்வதேச நாணய நிதியம், அதனை முன்னிறுத்தி நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகளில் இலங்கையில் இடம் பெற்ற மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தாமை தமக்கு மிகுந்த அதிருப்தியளிப்பதாக கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (4ம்பக்கம் பார்க்க)

## ஐ.எம்.எவ் கொடுத்த கடனும் ரணிலின் அரசியல் திட்டமும்



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு கிடைக்கும் என்ற அறிவிப்பு உத்தியோகபூர்வமாக கடந்த செவ்வாய்கிழமை அறிவிக்கப்பட்ட உடனடியாக இலங்கையின் பல பகுதிகளிலும் மகிழ்ச்சி ஆரவாரத்தை காண முடிந்தது. சில இடங்களில் பட்டாசு கொழுத்தி இதனைக் கொண்டாடினார்கள். பட்டாசு கொழுத்தியவர்கள் யார் என்று பார்த்தால் அவர்கள் அனைவருமே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் தான். (9ம் பக்கம்)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence/ Galloway
Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals
Finch & Pharmacy
Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area
Eglinton/Markham
Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated with Oversized Balcony
Angeline St. N & Springdale
Kawartha Lakes $749,900
Bedrooms: 3 Washrooms: 2
Brand New, Walkout Basement
Kennedy & Dougall Ave
Caledon $799,888
Bedrooms: 3 Washrooms: 3
Semi-Detached Home
Queens Quay & Lower Sherbourne
Toronto $889,000
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit
Brisdale & Clockwork
Brampton $1,985,000
Bedrooms: 4 Washrooms: 4
Assignment Sale, Brand New Home
Meadowvale / 401
Scarborough $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations
Kipling Ave / Finch Ave
Toronto $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location Location Location!!!
Simcoe St & Winchester
Oshawa $549,999
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Layout, Large Windows
Woodbridge Ave/ Clarence
Vaughan $799,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Low-Rise Boutique Style Building
Eglinton Ave. W /Mavis
Mississauga $799,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Charming Townhouse In A Great Area
Keele/Sheppard
Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property
Mccowan & Ellesmere
FOR LEASE
Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout
Martingrove/Rexdale
FOR LEASE
Toronto $2,900
Bedrooms: 3 Washrooms: 1
Renovated Main Floor Unit
Markham & Sheppard
FOR LEASE
Scarborough $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையில் தொடரும் மனிதஉரிமை மீறல்கள்! அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கண்டனம்!



இலங்கையில் கடந்த 2022ஆம் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளிங்கன் 21 மார்ச் 2023 வெளியிட்ட மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான வருடாந்த நாடுகளுக்கான அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் அண்டு மார்ச் மாதம் முதல் ஜீலை மாதம் வரை, நீடித்த மின்வெட்டு, அதிகரித்துச் செல்லும் உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் எரிபொருள் பற்றாக் குறை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடியால் நாடு உள்நாட்டு அமைதியின்மைக்கு தள்ளப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் அரசாங்கத் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்காகவும் ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு அனுமதி வழங்கியுள்ளமையை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இதுவொரு நல்ல செய்தி என்றும் இந்த தீர்மானமானது நாட்டின் பொருளாதார மீட்சிக்கான முக்கியமான நகர்வு எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் அனைவரும் செழிப்பாக வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு, நல்லாட்சி, வெளிப்படைத் தன்மையைக் குறிக்கும் கட்டமைப்பு மற்றும் நீடித்த சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# மோடியை அவமதித்த வழக்கில் ராகுல்காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை!

நான்கு ஆண்டுகள் முன்பு தொடரப்பட்ட அவதூறு வழக்கில் காங்கிரஸ் எம்பி ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. எனினும், அவருக்கு உடனடியாக ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய ராகுல் காந்திக்கு 30 நாட்கள் அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் ராகுல் காந்திக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று மனுதாரரின் வழக்கறிஞர் கோரியிருந்தார்.

இந்த வழக்கு, 2019ஆம் ஆண்டில் மோடி குடும்பப் பெயர் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துகளுடன் தொடர்புடையது. 'எல்லா திருடர்களுக்கும் மோடி என்ற குடும்பப்பெயர் இருப்பது எப்படி என்று ராகுல் காந்தி பேசியிருந்தார்.

வியாழனன்று நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது சூரத் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி நேரில் ஆஜராகி இருந்தார். விசாரணையின் போது எந்த சமூகத்தையும் தனது பேச்சு மூலம் புண்படுத்த விரும்பவில்லை என்று ராகுல் காந்தி கூறியதாக பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவரது வழக்கறிஞர்கள் குழு தெரிவித்தது.

தண்டனை அறிவிக்கப்பட்டதும், என்மதம் சத்தியம் மற்றும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது, சத்தியம் என் கடவுள், அகிம்சை அதை



அடைவதற்கான வழிமுறை என்ற மகாத்மா காந்தியின் கருத்தை ராகுல் காந்தி தனது டிவிட்டர் பக்கத்தில் ட்வீட் செய்துள்ளார்.

2019ம் ஆண்டு பொதுத்தேர்தல் சமயத்தில் ஏப்ரல் மாதம், கர்நாடக மாநிலம் கோலார் பகுதியில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பங்கேற்ற ராகுல்காந்தி, பிரதமர் நரேந்திர மோதியை கடுமையாக விமர்சித்துப் பேசினார். விவசாயிகள், வியாபாரிகள் உள்ளிட்ட எளிய மக்களின் பணத்தை திருடி நீரவ் மோதி, லலித் மோதி, முகுல் ஷோக்சி, விஜய் மல்லையாவுக்கு நரேந்திர மோதி வழங்குவதாக ராகுல் காந்தி குற்றம்சாட்டியதாக தி இந்து செய்தி வெளியிட்டது.

எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. அதெப்படி அனைத்து திருடர்களுக்கும் மோதி என்ற துணைப் பெயர் இருக்கிறது எனத் தெரியவில்லை,' என ராகுல் காந்தி பேசியதாக செய்திகள் வெளிவந்தன.

ராகுல் பேசிய கருத்துகளுக்காக குஜராத் முன்னாள் அமைச்சரும் பாஜக எம்.எல்.ஏவுமான புர்னேஷ் மோதி வழக்கு தொடுத்தார். இந்த நிலையில் சூரத்தில் நீதிமன்ற தீர்ப்புக்காக ராகுல்காந்தி நேரில் ஆஜரானார்.

நான்கு ஆண்டுகளாக நீடித்து வந்த கிரிமினல் அவதூறு வழக்கில் ராகுல் காந்தி குற்றவாளி என நீதிபதி அறிவித்தார். மேலும், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 499 மற்றும் 500ன் படி ராகுல் காந்தி அதிகபட்ச தண்டனையான 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 15,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார் அதே சமயம் அவருக்கு உடனடியாக பிணை வழங்கப்பட்டது. இந்த விவகாரத்தில் தனக்கு எந்தவித உள்நோக்கமும் இல்லை என்ற தனது தரப்பு விளக்கத்தின் போது ராகுல் காந்தி தெரிவித்திருந்தார்.

ரூ.10000 பிணையில் ராகுல் காந்திக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. எம்பியாக இருப்பதாக தற்போதைய சூழலில் ராகுல் காந்திக்கு எவ்வித சிக்கலும் இல்லை. தீர்ப்பை எதிர்ப்பு மேல்முறையீடு செய்ய அவர்களுக்கு 30 நாட்கள் அவகாசம் உள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தாத சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகள் குறித்து ஹரி ஆதங்கம்!



இலங்கைக்கான நிதியுதவிச் செயற்திட்டத்துக்கு அனுமதியளித்திருக்கும் சர்வதேச நாணய நிதியம், அதனை முன்னிறுத்தி நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகளில் இலங்கையில் இடம்பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தாமை தமக்கு மிகுந்த அதிருப்தியளிப்பதாக கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயற்திட்டத்தின்கீழ் எதிர்வரும் 48 மாத காலத்தில் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை கடந்த திங்கட்கிழமை அனுமதியளித்துள்ளது.

அதனையடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் தமிழ் மக்கள் சார்ந்து கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டும் நோக்கில் செவ்வாய்கிழமை கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஹரி ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையானது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் ஸ்திரமற்ற, வங்குரோத்து நிலையிலுள்ள நாடாக மாறியிருக்கின்றது.

சுமார் ஒருவருட காலத்திற்கு முன்னர் உணவு, எரிபொருள் மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டுடன் இலங்கையின் பொருளாதாரம் மிகமோசமடைந்தது. அது நாடளாவிய ரீதியில் பாரிய மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு வழிகோலியதுடன், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டிய நிலையைத் தோற்றுவித்தது. அதனைத் தொடர்ந்து ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி சர்வதேச நாணயத்துடன் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்ட நிலையில், இலங்கைக்கான உதவிச் செயற்திட்டத்துக்குக் கடந்த திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்சபை அனுமதியளித்துள்ளது. அதன்படி இவ்வுதவிச் செயற்திட்ட இணக்கப்பாடு தொடர்வதற்கு இலங்கை பல்வேறு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நிபந்தனைகளில் இலங்கையில் இடம்பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படாமை எம்மத்தியில் கடும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.


குறிப்பாக இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் அரசியல் பிரச்சினைக்கு உரியவாறான தீர்வு வழங்கப்படுவதுடன், வடக்கு - கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையும், பொருளாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்களைத் தீர்மானிப்பதற்கான அதிகாரமும் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதேவேளை இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பின் (பேர்ள்) பிரதிநிதி, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடரும் மனித உரிமை மீறல்கள், அதிகரித்த இராணுவமயமாக்கம், காணி அபகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் முறையற்ற செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டியதுடன் அவை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து இலங்கைக்கு கிடைத்துள்ள விரிவான நிதி வசதி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அவரின் விசேட உரையில் பாராளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இல்லை. என்னிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கவில்லை. இவை எதுவும் இல்லாத போதும் என்னிடம் இருந்தது ஒரே ஒரு பலம் தான்.

அது நான் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற என்னுடைய நாட்டை என்னால் மீட்க முடியும் என்ற நம்பிக்கை மட்டும் தான் எனக்கு இருந்த ஒரே பலம்.கடந்த கால அனுபவங்களினால் எனக்கு இருந்த நம்பிக் கையை கொண்டு நான் நாட்டை பொறுப்பேற்றேன். நான் வீழ்ந்தாலும் நாடு வீழாது என்ற எண்ணத்தில் சவாலை ஏற்றுக் கொண்டேன் என இதன் போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

04 ஏப்ரல் 2023 செவ்வாய்க் கிழமை– பங்குனி உத்தரம்

உபயம்:– ச.நிருஷன், ச.தனுஷன், ச.ஈஸ்வர்

விசேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும். பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

07ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஏகதின லட்சார்ச்சனையும் மூலமந்திர ஹோமமும் நடைபெறும்.

ஹோமத்தில் பங்கு பெற விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களை பதிவு செய்யுங்கள்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இலங்கை மக்களுக்கு IMF வெளியிட்ட மகிழ்ச்சித் தகவல்!




நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு உதவியளிக்க சர்வதேச நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அங்கீகாரம் அளித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல தரப்பு நிறுவனங் களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரை யிலான நிதியுதவியை இலங்கை பெறும்.

இதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை பெறும். 48 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்ட கடன் வசதி யின் கீழ் இலங்கைக்கு குறித்த தொகை வழங்கப்படும்.

இந்த மாத ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தி ற்கு அமைவாக இலங்கைக்கு பாரிஸ் கிளப், சீனா, இந்தியா உள்ளிட்ட உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் களின் நிதி உத்தரவாதம் கிடைத்தது.

இந்த நிலையில் 20 மார்ச் 2023 திங்கட்கிழமை இடம் பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் இந்த அனுமதி கிடைக்கப்பட்டு ள்ளது. இதன்படி இலங்கைக்கு முதல் கட்டமாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில் இது குறித்து கருத்துரைத்துள்ள, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிறிஸ்டேலினா ஜோர்ஜியேவா, இலங்கையில் நிறுவனங்கள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளுக்கு ஆழமான சீர்திருத்தங்கள் தேவை என வலியுறுத்தி யுள்ளார்.

அதிக பணவீக்கம், குறைக்கப்பட்ட கையிருப்பு, நீடித்து நிலைக்க முடியாத பொதுக் கடன் மற்றும் உயர்ந்த நிதித்துறை பாதிப்புகளுக்கு மத்தியில் கடுமையான மந்தநிலையுடன் இலங்கை மிகப்பெரிய பொருளாதார மற்றும் சமூக சவால்களை எதிர் கொண்டுள்ளது.


நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு, சீர்திருத்தங் களுக்கான வலுவான உரிமையுடன் கூடிய நீட்டிக்கப் பட்ட கடன்வசதியின் ஆதரவு வேலைத் திட்டத்தை விரைவாகவும் சரியான நேரத்தில் அமுல்படுத்துவதும் முக்கியமானதாகும் எனவும் சர்வதேச நாணய நிதியத் தின் பிரதானி கிறிஸ்டேலினா ஜோர்ஜியேவா தெரிவித் துள்ளார்.

# இலங்கை இனியும் வங்குரோத்தடைந்த நாடு அல்ல என ரணில் பெருமிதம்!

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழுவினால் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைத் துள்ள நிலையில் கடனை மறுசீரமைக்கும் வலிமை கொண்ட நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தை பெற்று ள்ளதாகவும், அதன்படி இலங்கை வங்குரோத்தான நாடல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார். எனவே இனிமேல் வழமையான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கும் திறன் எமக்கு கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் 21 மார்ச் 2023 செவ்வாய்க் கிழமை விடுத்துள்ள விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியை, அதிகரித்துக் கொள்வ துடன், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்கள் மீதான இறக்குமதித் தடைகளை அரசாங்கம் படிப் படியாக நீக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும், சர்வதேச



நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இரு தலைவர்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை கலைமாமணி ராஜேஸ் வைத்தியாவின் இசைச்சங்கமம்

எமது இனிய வாசகர்கள், அபிமானிகள், கலா ரசிகர்கள் அனைவரது கவனத்திற்கு! இவ் வாண்டு மண்டபத்தின் இருக்கைகளின் நம்பர்கள் நுழைவுச் சீட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது. எனவே அன்புள்ளங்கள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல் 416 841 9600 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கும் ஒத்தாசைக்கும் நன்றி! வணக்கம்! வாருங்கள்! அரங்கத்தில் சந்திப்போம்! மேலதிக விபரங்களுக்கு 12, 13ம் பக்கம் பார்க்க

# இணைந்து செயற்படுதல் என்றால் என்ன?

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்ட த்தில் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு கட்சியின் மத்திய குழுவில் இணக்கம் தெரிவித்திருப்பதாக தமிழரசு கட்சி தெரிவித்திருக்கின் றது. தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் ஒற்றுமைபற்றி பேசுவதென்பது நகைச்சுவைக்குரிய ஒன்று. இந்த நகைச்சுவையை அவ்வப்போது தமிழரசு கட்சியின் தலைவராக அறியப்படும் மாவை சேனாதிராசா தான் நினைவுபடுத்துவதுண்டு. இப்போதும், தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அவர் தான் இணைந்து பயணிக்கும் யோசனையை முன் வைத்திருக்கின்றார். வழமை போல் செயல்படுவதற்கு அனைவரும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வாறு இணக்கம் தெரிவித்திருப்பவர்களே தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஏனையவர்களைத் தாக்கி பேசுவதற்கான பிள்ளையார் சுழியையும் இடுவர். உண்மையில், இணங்கிச் செயல்படுவதென்றால் என்ன? தமிழரசுகட்சியினர் ஏனைய கட்சிகளுடன் இணங்கிச் செயல்படுவதாக அவ்வப்போது கூறிக் கொண்டாலும் கூட அந்த இணக்கத்தைத் தொடர முடியாதவாறு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துப வர்களும் அவர்கள் தான்.

ஐ. நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளருக்கு அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து கடிதம் எழுதும் விடயத்தில் ஆரம்பத்தில் உடன்பாட்டை வெளிப்படுத்திய மாவை சேனாதிராசா, பின்னர் அதிலிருந்து நழுவிக் கொண்டார். இறுதியில் ஐந்து கட்சிகள் தனியாகவும் தமிழரசு கட்சி தனி யாகவும் கடிதங்களை அனுப்பியிருந்தது. அனை வருமே ஒரு விடயத்தை தான் வலியுறுத்தப் போகின்றனர் என்றால் அதனை ஏன் அனைவருமாக இணைந்து முன்னெடுக்க முடியாது?

இந்த இடத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து பயணிக்கும் முடிவை தமிழரசு கட்சியால் ஏன் கைக் கொள்ள முடியவில்லை? இதே போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயல்படும் விடயத்திலும் தமிழரசு கட்சியே அவசரப்பட்டு தன்னிச்சையாக முடிவெடுத்து அதனை வெளிப்படுத் தியது. ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயல்படு வதில் கரிசனை உள்ளவர்கள் அவ்வாறானதொரு முடிவை எடுப்பதற்கு முன்னர் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை அழைத்து கலந்துரையாடியிருக்க வேண்டுமல்லவா!

கூட்டமைப்பை எவ்வாறு முன்கொண்டு செல்ல வேண்டும் – அதற்கான தந்திரோபயங்கள் என்ன? – என்பது தொடர்பில் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவெடுத்திருக்க வேண்டும். ஏனெனில், 2004ஆம் ஆண்டிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக தமிழரசு கட்சியின் சின்னமே பயன்படுத்தப்பட்டது.

மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் கூட்டமைப்பையே தங்களின் அரசியல் கட்சியாக அங்கீகரித்திருந்தனர். கூட்டமைப்புக்கான ஆதரவின் மூலமே தமிழரசு கட்சி மக்கள் மத்தியில் சாகாமல் இருந்தது. ஏனெனில், மறந்து போய்கிடந்த தமிழரசு கட்சி 2004இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் மறுபடியும் மக்களுக்கு அறிமுக மானது. மக்கள், கூட்டமைப்பின் மீதான நம்பிக் கையின் அடிப்படையிலேயே வீட்டு சின்னத்துக்கு வாக்களித்திருந்தனர்.

ஆனால் தமிழரசு கட்சி ஏனையவர்களுடன் ஆலோ சிக்காமலேயே தன்னிச்சையாக வெளியேறும் தீர்மான த்தை மேற்கொண்டது. இணங்கிச் செயல்படுவதில் அக்கறையிருப்பவர்கள் ஒரு போதுமே இவ்வாறு செயல்பட்டிருக்க மாட்டார்கள்.

தொழில்நுட்ப காரணங்களுக்காக அதாவது, உள்ளு ராட்சி தேர்தல் முறைமையிலுள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டு ஒரு தந்திரோபாய தீர்மானத்தை நாம் கைக்கொள்ள வேண்டுமென்று எண்ணி யிருந்தால் அதனை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களுடன் கலந்துரையாடியல்லவா மேற்கொண்டிருக்க வேண்டும். எந்தக் கோணத்தில் நோக்கினாலும் இணங்கிச் செயல்பட வேண்டும் என்னும் எண்ணம் தமிழரசுக் கட்சியினர் மத்தியில் காணப்படவில்லை.

ஒருவேளை மாவை சேனாதிராசாவிடம் இருந்திரு க்கலாம். ஆனால், மாவை சேனாதிராசாவின் குரலுக்கு கட்சிக்குள் முக்கியத்துவம் இல்லை. இப்போதும் மாவையால் முன்வைக்கப்பட்டிருக்கும் இணங்கிச் செயல்படுவதற்கான யோசனை பின்னர் கருத்தில் கொள்ளப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதமுண்டு

# வேலணை மண்ணின் மைந்தன் எல்லோரும் போற்றும் எளிமை மிகு அதிபர் திரு பொன்னையா நடராஜா அவர்களுக்கு 93வது அகவை பாராட்டு விழா

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அருமைத்தம்பி திரு.இந்துநாதன் சிவநாதன் அவாகள் என்னிடம் ஓர் அன்பு வேண்டுகோள் விடுத்தார். அதாவது ஆசிரியர் திரு.பொன்னையா நடராசா அவர்களுக்கு 24.04.2020 இல் 90 வயதாகிறது என்றும்

அவரது பிறந்த நாளை அவருக்கான சேவைநலன் பாராட்டு விழாவாக நடாத்துவதற்கு எனது ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். சிவநாதன் மீதும் ஆசிரியர் அவாகள் மீதுங் கொண்ட அன்பின் காரணமாக நானும் எனது இசைவைத் தெரிவித்திருந்தேன்.

இருந்த போதும் உலகளாவிய கொரோனா தொற்றின காரணமாக ஏற்பட்ட இடையூறுகளால் விழாவைத் திட்டமிட்டபடி நடாத்த முடியவில்லை. பின்னர் கடந்த வருட இறுதிப்பகுதியில் மதிப்புக்குரிய அதிபர் திரு.சண்முகராஜா வாமதேவன் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு 2023 இல் இந்த விழாவினை எப்படியும் நடாத்த வேுண்டும் என்ற தங்களது எண்ணத்தை நேரடியாகவும் இருவருக்கும் பொதுவான அன்பர் திரு .கனகரட்ணம் பாஸ்கரன் அவர்கள் ஊடாகவும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும் எவரையும் வாழும் போதே வாழ்த்த வேண்டும் என்ற எனது விருப்பம் காரணமாகவும் பாராட்டுக் குழுவில் ஒருவராக இணைந்து செயலாற்றி வருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

விழாவின் நாயகர் ஆசிரியர் திரு. பொன்னையா நடராசா அவர்களை எனது ஏழு வயதிலிருந்து அறிவேன். வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இரண்டாம் வகுப்பில் அவரிடம் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அதுவே இவருக்கும் எனக்கு



மான முதல் அனுபவம்.

ஆசிரியர் அவர்கள் எனது தந்தையாரின் பேரன்புக்குரியவர் என்பதனையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். தாம் பெறாத பிள்ளைகளையும் தம் பிள்ளைகள் என்று சொல்லக்கூடிய உரிமையுள்ளவர்கள் ஆசிரியப் பெருந்தகைகள்.. அந்த வகையில் தனது புனிதமான ஆசிரியத் தொழில் மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்களின் அன்பிற்கும் மரியாதைக்குமுரியவர் திரு .நடராசா அவர்கள் என்றால் அது மிகையல்ல.

தான் கல்வி கற்ற பாடசாலைகளான வேலணை மத்திய கல்லூரி மற்றும் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை ஆகியவற்றில் முறையே ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றக் கூடிய பேறு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆசிரியர் அவர்களுக்கு அவர் வணங்கும் தெய்வமான வேலணை முத்துமாரி அம்மன் திருவருள் கிடைத்திருக்காமல் இது சாத்தியமில்லை.

எண்பதுகளில் இவர் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் அதிபராகவும், வேலணை ப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் இருந்த போது பொது வேலைகளின் நிமித்தம் இவருடனான உறவு மீண்டும் ஆரம்பித்ததுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அமைந்ததனை நான் பெற்ற பெரும்பேறாக இன்றும் கருதுகின்றேன்.

வேலணை முத்துமாரியம்மன் ஆலயப் பரிபாலனசபைத் தலைவர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆசிரியர் சங்கப் பதவிகள் தொடங்கிப் பல உயர்வுகள் இவரைத் தேடி வந்தன. ஆவற்றினாலெல்லாம் தனது நிலை மாறாது அடங்கி நின்ற குணக்குன்று ஆசிரியர் அவர்கள். எந்த நிலையிலும் தன்னைத் தானே வியந்து பாராட்டியதில்லை.

பணியுமாம் என்றும் பெருமை – சிறுமை அணியுமாமம் தன்னை வியந்து என்ற குறள் வரிகளுக்கிணங்க இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் உயர்ந்த பண்புகளுக்குச் சொந்தக்காரர். நல்லனவற்றை எங்கு கண்டாலும் போற்றி மகிழும் சிறப்பு மிக்கவர். தான் கல்வி கற்ற, கற்பித்த பாடசாலைகளின் வளர்ச்சியில் இன்று வரை அக்கறை கொண்டு முடிந்தவரை பாடசாலை விழாக்களில் நேரடியாகப் பங்குபற்றி வருபவர். அது மட்டுமன்றி ஒரு காலத்தில் வளைந்து நெளிந்து சென்ற இவரது வீட்டிற்கு அருகாமையில் உள்ள வீதியை தனது காணியை இலவசமாகக் கொடுத்து நேராக்கிய பெருமைக்குரியவர். இத்தகைய செயற்கரிய செயலைச் செய்தவர்கள் சிலரே. அவர்களில் ஆசிரியரும் ஒருவர் என்பது பாராட்டுக்குரியது.

மக்கள் பணி பலவற்றைத் தலை மேற்கொண்டு தன்னிகரில்லாத் தொண்டுகள் பல செய்தவர். தனக்குவமை இல்லாத முத்துமாரி அம்மன் தாள் பணிந்து தளராமல் அறப்பணிகள் பல செய்து ஆலயத்தின் வளர்ச்சிக்காய் உழைத்த செம்மல். உன்னதமான குணங்கள் பல ஒருசேரப் பெற்ற அவரது சீரிய செயற்பாடுகளால் கவரப்பட்டு நின்றவர்கள் பலர். அவர்களில் நானும் ஒருவன். நடைபெறவிருக்கின்ற பாராட்டு விழாவிற்கு எல்லா வகையிலும் தகுதியும் உரித்துமுடைய ஆசிரியர் அவர்கள் மன நிம்மதியோடும் உடல் ஆரோக்கியத்தோடும்

ஆண்டுகள் பல நீண்டு வாழ வேுண்டும் என்று வாழ்த்தி வணங்குவதோடு பல சிரமங்களுக்கு மத்தியில் 26 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்ப்பாணத்தில் இப்பாராட்டு விழாவை ஒழுங்கு செய்த சக விழாக் குழுவினரைப் பாராட்டி நன்றி கூறி என் நெஞ்சத்தில் ஊறி வருகின்ற சொல் அருவிதனை நிறைவு செய்கின்றேன்.

சி. இளஞ்செழியன்

பழைய மாணவர் (1975 - 1982)

வேலணை மத்திய கல்லூரி

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# யாழ்ப்பாண முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் நினைவும் ஐ.தே.க. தேர்தல் வன்முறையும்!

ஈழ போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத தலைவர்களில் ஒருவரான வெற்றிவேலு யோகேஸ்வரனின் 99வது பிறந்த தினம் அண்மையில் நினைவு கூரப்பட்டது. 1981 மே - ஜீன் யாழ். தேர்தல் வன்முறைகள் குறித்து பாராளுமன்றத்தில் அவர் கூறியவற்றை தெற்கில் தற்போது காணமுடிகிறது.

கடந்த மே 9 பொதுஜன பெரமுன எம்.பி. அமரகீர்த்தி அத்துக்கொரள அரச எதிர்ப்பாளர்களால் கொல்லப்பட்டார். 36 பேர் கைது சில அமைச்சர்கள், ஆளும் தரப்பு எம்.பிக்களின் வீடுகளும் (ஜீலை9) பிரதமர் ரணிலின் வீடும் கொளுத்தப் பட்டன. பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பினரும் எதிரணியினரும் கண்டி த்தனர். நட்டஈடும் வழங்கப்படவுள்ளது.

யோகேஸ்வரன் வீடு எரிக்கப்பட்தை அவரும் எதிர்க்கட்சித்தலைவர் அமிர்த லிங்கமும் சபையில் ஜீன் 9 கூறியபோது அமைச்சர் சிறில் மத்தியு பிரதி அமை ச்சர் புஞ்சிநிலமே குறுக்கீடு செய்தனர். ஐ.தே.க.எம்பிக்கள் சிரித்தனர். எவருமே கண்டிக்கவில்லை.

கடந்த 7 பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை கலைத்த படையினரில் சிலர் பொல்லுகளுடன் நின்றனர். இரசாயனம் கலந்த கண்ணீர்ப்பு கை குண்டுகள். மாணவர்கள் பாதிக்கப் பட்டனர். மனித உரிமை ஆணைக்குழு விசாரணை.யோகேஸ்வரனின் வீடு எரிப்பு க்கு விசாரணை இல்லை. நட்ட ஈடும் இல்லை.

உள்ளூராட்சி தேர்தலுக்கு பொருளாதார நெருக்கடி நிதியில்லை என ஜனாதிபதி யும் ஆளும் தரப்பினரும் ஐ.தே.கட்சி யினரும் கூறி வருகின்றனர்.

1981 யாழ்.அபிவிருத்திச்சபை தேர்தலை ஐ.தே.கட்சியினர் குழப்பி யாழ்.நகரை எரித்ததை அமிர்தலிங்கம் விபரமாக கூறியிருந்தார். பல கோடி ரூபா இழப்பு. அன்று பொருளாதாரத்தை சிந்திக்காத வர்கள் இன்று சிந்திக்கிறார்கள்.

(HansardJune 9 Vol 15no 1-colomns 112-120) யோகேஸ்வரன்- ஜீன் 9மே 31 இரவு நான் உயிர் பிழைப்பேன் என நினைக்கவில்லை. கடவுள் தான் காப் பாற்றினார். பஜாரில் தீப்பிழம்புகளை பார்க்க முடிந்தது. எனது வீட்டை தாக்குவார்கள் என மனைவி கூறிய போது நான் ஒரு எம்.பி என்பதால் அவர்கள் வந்தால் கூச்சலிடுவார்கள் என்றேன்.

உடமைகள் எதுவுமே இல்லை. பெனியன் மட்டுமே. நானும் மனைவியும் சுவர் ஏறிக் குதித்து தப்பினோம் இந்த கொடுங்கோல் ஆட்சியிலிருந்து என் மக்களை விடுவிக்க நான் எப்போதும் உறுதியாக இருக்கிறேன்.

இந்த அரசாங்கம் நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் மீது வன்முறை பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துள்ளது. எனது வீட்டின் மீதான தாக்குதலை மட்டுமே நான் கூறினேன். பதிவு செய்யப்பட வேண்டிய பல சம்பவங்கள் உள்ளன. மாவட்ட அமைச்சரின் செய லாளருக்கும், பிரதி பாதுகாப்பு அமைச் சருக்கும் பொலிஸார் நகரின் சில பகுதி களை எரிப்பதாக கூறினேன்.

(ஐ.தே.க.எம்பிக்கள் சிரிப்பு)- யோகேஸ் வரன் உங்களை உலகமே பார்த்து சிரிக்கிறது. ஏளனச் சிரிப்பு. இப்போது நீங்கள் சிரிக்கிறீர்கள். ஆனால் அவர்கள் உங்களுக்கு கற்பிப்பார்கள். நீங்கள் பெரிய நகரத்தின் ஒரு பகுதியை எரித் தீர்கள். இந்த விவாத ஹான்சார்ட்டை படிப்பவர்கள் உங்களை இழிவாகப் பார்ப்பார்கள்.

எனது வீட்டுக்கு முன்பாக 100 பொலி ஸார் நின்றனர். சிலர் காக்கி சீருடை. சிலர் அரைக் காற்சட்டை. சிலர் வெள்ளை பெனியன் அணிந்திருந்தனர். பொல்லுகள் வாள்கள், துவக்குகளுடன் காணப்பட்டனர். கேற்றை சுட்டு திறந்து உட்புகுந்து கராஜில் 404 கார், ஜீப் எனது சொத்துக்களையும் எரித்தனர். நகைகளை கொள்ளையடித்தனர். நான் இருந்திருந்தால் கொன்றிருப்பார்கள்.

எனது தந்தையின் வீட்டுக்கு காலையில் சென்றேன். வேறு இடத்தில் இரவு தங்கி யிருந்தேன். மாலை 5.00 மணிக்கு சில இராணுவத்தினர் தந்தையின் வீட்டுக்கு சென்று என்னைத்தேடி எங்கே எனக் கேட்டனர். அதிகாலை 2.00 மணியள வில் 8 பொலிஸ் அதிகாரிகள் தந்தையின் வீட்டுக்கு மீண்டும் வந்து ஒவ்வொரு அறையிலும், கட்டிலுக்கு கீழும் என்னைத் தேடினார்கள்.

அயர்லாந்தில் பிரித்தானிய படையினர் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகியும் எம்.பிக்களின் பொது மக்களின் வீடு களை எரிக்கிறார்களா? காவல்துறை யினர் ஒழுக்கமாக இருக்க வேண்டும். அவர்களை கட்டுப்படுத்துவது உங்கள் கடமை என அமைச்சர் காமினி திச நாயக்காவை கேட்டுக்கொள்கிறேன்.

(Hansard June 9-1981 தொகுதி 15 எண் 1 பத்திகள் 67-92) அ.அமிர்த லிங்கம் இச்சபையின் கௌரவ உறுப்பி னர் ஒருவரின் வீடு ஆக்கிரமிக்கப்பட்டு முற்றிலும் எரிந்து நாசமானது. அவர் வீதிக்கு வந்தால் சுடுவதற்கு துப்பாக்கி ஏந்தியவர்கள் வீதியோரம் நின்றனர். மாவட்ட அமைச்சரிடம் நேரில் சென்று பார்க்குமாறு கேட்டேன்.

யாழ்.பஸ் நிலைய கடைகளை எரித்த சீருடை சிவில் உடை பொலிஸார் பஸ்




ஸில் சென்று யோகேஸ்வரன் வீட்டு பிரதான கேற்றை சுட்டு திறந்து வீட்டை முற்றாக எரித்தனர். பொலிஸ் மா அதிபருக்கும் முறையிட்டேன்.

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் தினத்துக்கு முதல் நாள் 3 ஆம் திகதி இரவு யாழ்ப்பாண வீதிகளில் துப்பாக்கிச் சூடு.கொலைகள் இடம்பெற்றன.

தேர்தல் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் ஆணையாளரின் கடமைகளில் சில அமைச்சர்கள் தலையிட்டு ஜன நாயகத்தை அழித்துள்ளனர். வாக்குகள் எண்ணப்படாமல் சுமார் 40 முதல் 45 பெட்டிகள் எடுக்கப்பட்டன.

இப்பேரழிவுக்கு காரணமான பொலி ஸாரை வெளியேற்ற வேண்டும். கொலை கொள்ளைக்கு பொறுப்பான இராணுவம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான உடனடி நிவாரணம் வழங்க ப்படவேண்டும்.

மே 31-ஜீன் 8 வரை இடம் பெற்ற சம்பவங்களை சர்வதேச மன்னிப்புச்சபை அல்லது சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம் போன்ற சர்வதேச அமை ப்புகள் விசாரணை செய்யவேண்டும். தெரிவுக் குழுக்கள் விசாரணை ஆணைக் குழுக்கள் மீதான நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம்.

தமிழ்ப்பகுதிகளில் குறைந்தது 75 சத வீதமான அதிகாரிகள், பொறுப்பதி காரிகளாக தமிழர்கள் அல்லது முஸ்லிம் களாக இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களின் உயிர் உடமைகளை பாதுகாக்க பொலி சாருடன் இணைந்து மாவட்ட அபி விருத்தி மன்றங்களின் கீழ் ஊர்காவல் படையினரை ஏற்படுத்த வேண்டும். அமிர்தலிங்கம் அன்று கூறியவை இன் றும் தொடர்கிறது.

## IMF நிபந்தனைகள் இவை தான் அறிவித்தார் ஜனாதிபதி!

ஐ.எம்.எவ் நிபந்தனைகள் தொடர்பில் நாடாளுமன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதி யத்தால் அங்கீகரிக்கப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியின் முதல் தவணையாக 333 மில்லியன் டொலர்களை அடுத்த இரண்டு நாட் களுக்குள் இலங்கை பெறவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் முன் வைக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் இந்த மூன்று பில்லியன் டொலர்கள் நான்கு ஆண்டுகளில் தவணைகளில் வழங்கப்படும்.

இலங்கை அமுல்படுத்த வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக் கப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகள் பின்வருமாறு.

1.கடன் மறுசீரமைப்பு திட்டம் ஏப்ரல் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2.ஐக்கிய நாடுகள் சபையின் நியமங் களுக்கு அமைவாக ஊழலுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

3.அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்க தேவையான நடவடிக்கை களை அரசு எடுக்க வேண்டும்

4.அதிக வருமானம் ஈட்டுபவர்களிட மிருந்து அதிக பங்களிப்புடன் செல்வ வரி விதித்தல்

5.2025க்குள் சொத்து மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம்

6.2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை 12%-18% ஆகக் குறைக்க இலக்கு

7.ஜீன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப் பாடுகள் நீக்கப்பட வேண்டும்

8.நாணய மாற்று விகித நெகிழ்வுத் தன்மையை பராமரித்தல்



9.மத்திய வங்கியை மேலும் சுதந்திர மாக்குதல்

10.வலுவான சமூக பாதுகாப்பு வலை யமைப்பை அறிமுகப்படுத்துதல்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 9 பேர் 5 வருடங்களின் பின்னர் விடுதலை!

ஒட்டிசுட்டான் பகுதியில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பெயரில், கைது செய்யப்பட்ட 11 சந்தேக நபர்களில் 9 சந்தேக நபர்கள் ஐந்து வருடங்களின் பின்னர் 21 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

1.விஜயகுமார் கேதீஸ்வரன் 2.அரியரத் தினம் காந்தராசா 3.அன்பரசன் ஹரிஹர ராஜ் 4.இளங்கரத்தினம் 5.கிருஷ்ணசாமி முத்து ராசா 6.ரூபகாந்தன் 7.ரகுவரன் 8.உதயசீலன் 9.புஷ்ப தேவன் ஆகி யோரே. எவ்வித குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படாத நிலையில் விடுதலை செய்யப்பட்டார்கள் .

சட்டத்தரணிகள். ரத்னவேல் கணேஸ் வரன் ஆகியோரின் தீவிர முயற்சியினால் இவர்கள் விடுவிக்கப்பட்டனர் .

மிகுதியான இருவரும் விடுவிப்பதற்காக சட்டத்தரணிகள் இருவரும் நடவடி க்கை மேற்கொண்டு வருகின்றனர் அவர்கள் வெகு விரைவில் விடுவிக்கப் படுவார்கள் என சட்டத்தரணிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

### எழிலன் வழக்கு ஒத்திவைப்பு

இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது சிறிலங்கா இராணு வத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளராக செயற்பட்ட எழிலன் உட்பட ஏனை யோரை 22 மார்ச் 2023 நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. எனினும் அன்றைய தினம் நீதிபதி வருகை தராமையினால் குறித்த வழ க்கு மீண்டும் திகதியிடப்பட்டது. விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பா ளராக செயற்பட்ட எழிலன் உட்பட இறுதிக்கட்ட போரில் இராணுவத்தின ரிடம் சரணடைந்து காணாமல் ஆக்க ப்பட்டவர்கள் தொடர்பாக சரணடைந்த குடும்ப அங்கத்தவர்கள் சார்பில் ஆட் கொணர்வு வழக்கு தாக்கல் செய்யப் பட்டிருந்தது. அந்த மனுமீதான தீர்ப்பினை வவுனியா மேல்நீதிமன்றம் கடந்தமாதம் வழங்கியது. அதில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இராணு வத்திடம் சரணடைந்தனர் என்பதற் குரிய ஆதாரங்கள் இருப்பதில் மன்று திருப்தியடைந்தது.

எனவே அத்தகைய நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்து வதுடன், அப்படி முடியாது போனால் அதற்கான காரண ங்களை நீதிமன்றில் அன்றைய தினம் விளக்கமளிக்குமாறும் வழக்கு திகதி யிடப்பட்டது.

எனினும் அன்றைய தினம் நீதிபதி மன்றுக்கு சமூகமளிக்காமையினால் குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதத் திற்கு திகதியிடப்பட்டுள்ளதாக பாதிக்க ப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலை யான சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் பண்பாக நடந்தால் எந்தவொரு பிரச்சனையும் வராது என்கிறார் ஆறு.திருமுருகன்




யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் எல்லாம் பண்பாக நடந்தால் எந்த ஒரு பிரச்சனை யும் வராது என கலாநிதி ஆறு திரு முருகன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் வேண்டுகோளுக்கு இணங்க தனியார் நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை யினை வைபவரீதியாக திறந்து வைத்த பின் சிறப்புரையாற்றும் போது மேற் கண்டவாறு தெரிவித்தார்

எங்களிடத்தில் ஆசன போட்டி இடம் பெறுகின்றதே தவிர எங்களிடத்தில் ஒற்றுமை இல்லை யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் எல்லாம் பண்பாக நடந் தால் எமக்கு எந்த ஒரு பிரச்சனையும் வராது. வரலாறுகளை கைவிட்டு விட்டோம் எங்களுடைய வரலாறுகளை பேணி பாதுகாக்க வேண்டும் வார்த்தை களில் பிரயோசனம் இல்லை செயல் வீரர்கள் தான் வேண்டும், அரசியலுக்கு அப்பால் வள்ளுவனுக்கு ஒரு அருமை யான சிலை வைத்துள்ளார்கள். எங்களு க்கு ஒரு குறையும் இல்லை. கடவுள் எங்களை கைவிடவில்லை நாங்கள் அடித்து துரத்தப்பட்டு அவலப்பட்டு ஒரு சிறு பையோடு புலம் பெயர்ந்த சமூகம் இன்று கோடான கோடியை கொடுத்து இந்த மண்ணில் எவ்வளவு கோயில்களை கட்டுகிறார்கள்.

பாடசாலைகளை அலங்கரிக்கிறார்கள் எப்படி எல்லாம் வாழ்ந்த கிராமங்களை எழுச்சி பெற செய்கின்றார்கள். இன்று கடவுள் அருளால் கடல் கடந்து கண் டம் கடந்து போனவர்களுக்கு இன்றை க்கு ஒரு சக்தி பிறந்திருக்கிறது.

இன்று ஆட்சியாளர்கள் நாடு கூட அவர்களை தான் தேடுகின்றார்கள். இந்த நாட்டினுடைய அரசு புலம்பெயர் தமிழர் களை கூப்பிடுகிறது.

நீங்கள் முதலிட்டால் இந்த நாடு நிமிரு மென்று. எனவே தான் இந்த நாட்டை அடகு வைத்தவர்கள் அடகை மீட்ப தற்கு யாரை கூப்பிடுகிறார்கள் என்றால் அவலப்பட்ட தமிழர்களைத் தான் இன்றைக்கு கூப்பிடுகின்றார்கள் அழுத எமது கண்ணீருக்கு தீர்வு கிடைத்தி ருக்கின்றது எனவே நாங்கள் ஒற்றுமை யாக இருக்க வேண்டும் எனவும் தெரி வித்தார்.

## கொக்குத்தொடுவாயிலும் தமிழர் நிலம் ஆக்கிரமிப்பு!

தமிழரின் பூர்வீக கிராமமான கொக்குத் தொடுவாயில் பல நூறு ஏக்கர் வயல் நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களம் எந்த அறிவிப்புமின்றி எல்லைககற்களை நாட்டியுள்ளது என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். கொக்குத் தொடுவாய் கோட்டக்கேணியிலிருந்து அம்பட்டன் வாய்க்கால், தீ முந்தல் பணம் போட்டகேணி, நாயடிச்ச முறி ப்பு, வெள்ளைக்கல்லடிசிவந்தா முறிப்பு, சூரியனாறு வரையான தமிழ் மக்களு க்கு சொந்தமான பூர்வீக வயல் நிலங் களிலேயே நிலஅளவைத் திணைகளத் தினர் எல்லைக் கற்களை நாட்டி யுள்ள னர்.

இது தொடர்பாக காணிகளுக்கு உரிய வர்களுக்கோ அல்லது கமக்கார அமை ப்பினருக்கோ அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்த அப்பகுதி மக்கள், இவ்வாறு தங்களின் காணிகளை அபகரிக்க முனைவது சிங்களமயமாக்கும் நோக்கமே என்றும் சாடியுள்ளனர்.

மேலும், தமிழ் மக்களுக்கு சொந்தமான ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்துக்கும் மேற்பட்ட வயல்களில் மேட்டுக் காணி களை குறிவைத்தே இவ்வாறு எல் லைக் கற்கள் நாட்டப்பட்டுள்ளன என் றும் தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

இதே போன்றதொரு செயல்பாடு கடந்த வருட இறுதியிலும் ஏற்பட்டது. அந்தச் சமயம், உரிய நில அளவைத் திணைக்களம் மற்றும், வெலி ஓயா பகுதி நிலஅளவைத் திணைக்களத்தி னருடன் பேசிய அப்பகுதி மக்களும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் அந்த எல்லைக் கற் களை அகற்றியிருந்தனர். அத்துடன், இவ்வாறான எல்லைக்கல் நாட்டுவதாக இருந்தால் அது குறித்து உரியவர் களுக்கும் கமக்கார அமைப்பு, மாவட்ட செயலர், பிரதேச செயலர் ஆகியோரு க்கு உரிய அறிவித்தல் விடுக்கப்படும் என்று எல்லைக்கல் நாட்டிய நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர். இந்த நிலையிலேயே, மீண்டும் சத்தம் சந்தடியின்றி மீண்டும் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன என்றும் கூறினர்.

இந்த விடயம் குறித்து கொக்குத் தொடுவாய் கமக்கார அமைப்பினர் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனுக்கு தெரியப் படுத்தினர். இதையடுத்து அவர் நேற்று அந்த இடங்களைப் பார்வையிட்டார். அத்துடன், இது குறித்து உரியவர் களின் கவனத்துக்கு கொண்டு வருவ தாகவும்உறுதியளித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் ஆகி யோரின் கவனத்துக்கும் கொண்டு வரவுள்ளதாக கொக்குத்தொடுவாய் மக்கள் தெரிவித்தனர்.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# ஐ.எம்.எவ் கொடுத்த கடனும் ரணிலின் அரசியல் திட்டமும்

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு கிடைக்கும் என்ற அறிவிப்பு உத்தியோகபூர்வமாக கடந்த செவ்வாய்கிழமை அறிவிக்கப்பட்ட உடனடியாக இலங்கையின் பல பகுதிகளிலும் மகிழ்ச்சி ஆரவாரத்தை காண முடிந்தது. சில இடங்களில் பட்டாசு கொழுத்தி இதனைக் கொண்டாடினார்கள். பட்டாசு கொழுத்தியவர்கள் யார் என்று பார்த்தால் அவர்கள் அனைவருமே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் தான்.

கடன் கிடைத்திருப்பதற்காக பட்டாசு கொழுத்திக் கொண்டாடிய ஒரே நாடாக இலங்கை மட்டும் தான் இருக்க முடியும். ஆனால், இதன் பின்னணியில் உள்ள அரசியல் தான் நாம் புரிந்து கொள்ள வேண்டியது. இலங்கைக்கு கடன் கிடைத்திருப்பதை தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு கிடைத்துள்ள ஒரு வெற்றியாகக் காட்டிக் கொள்வது தான் அவர்களுடைய நோக்கம். அதற்கான அரசியல் தேவை ஒன்று அவர்களுக்கு இருந்துள்ளது.

கடனைப் பெற்றுக் கொண்டமை ஒரு வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட முயற்சியாக இருக்கலாம். அண்மைக் காலம் வரையில் ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக விமர்சித்து வந்த ஹிருணிகா பிரேமச்சந்திர கூட, ‘இது தனிப்பட்ட முறையில் ரணில் மீதான நம்பிக்கையிலேயே வழங்கப்பட்டிருக்கின்றது எனக் கூறியிருக்கின்றார். இதனையிட்டு எதிர்க் கட்சிகளும் மகிழ்ச்சியடையலாம் என்றும் அவர் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் நிறைய மர்மங்களும், இரகசியங்களும் இருப்பது போல எதிர்க்கட்சிகள் பரப்புரை செய்து வந்த நிலையில், அந்த உடன்படிக்கையின் விபரங்களை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் புதன்கிழமை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கின்றார். அரசுக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுத்து வந்த எதிரணியினருக்கு இது பலத்த அடியாக விழுந்திருக்கின்றது.

இந்த உடன்படிக்கை தொடர்பாக முன்னரே தமக்கு தெரிவிக்கப்பட்டிருந்தால், இதனை மேலும் சிறப்பாகச் செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை தம்மால் வழங்கியிருக்க முடியும் என்ற கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார் ஆக, ஐ.எம்.எப். உடன்படிக்கையை வைத்து அரசியல் செய்ய முடியாது என்ற ஒரு நிலையை எதிர்க்கட்சிகளுக்கு ரணில் ஏற்படுத்தி விட்டார் என்றே தெரிகின்றது.

அதேவேளையில், ரணிலைப் பொறுத்த வரையில் இது தனக்கு கிடைத்த ஒரு தனிப்பட்ட வெற்றியாகக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை இருந்துள்ளது. அண்மைக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான போராட்டங்களை எதிர்க்கட்சிகள் தீவிரப்படுத்தியிருந்தன. ராஜபக்சக்களுக்கு எதிராக முன்னெடுத்த போராட்டங்களின் தொடர்ச்சியாக இதனை அவர்கள் முன்னெடுக்கின்ற போதிலும், அப்போதிருந்த மக்கள் அலையை இவர்களால் இப்போது உருவாக்க முடியவில்லை.

அதிகரித்த வரி விதிப்பு, விலைவாசி உயர்வு, உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை, அடக்குமுறைகளைப் பிரயோகிப்பது என்பனவற்றை பிரதானமாக முன்நிறுத்தியே இப்போது ரணிலுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன தான் இந்தப் போராட்டங்களின் பின்னணியில் நிற்கின்றன.

இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் ஏதோவொரு வகையில் அடிப்படையாக இருப்பது பொருளாதார நெருக்கடிதான். இப்போது, ஐ.எம்.எப். வழங்கியிருக்கும் கடன்களின் மூலமாக இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முடிவைக் கொண்டு வந்து விடப் போகின்றோம் என்பதைத் தான் ரணில் சொல்லியிருக்கின்றார். பட்டாசு கொழுத்தியவர்கள் சொல்லியிருக்கும் செய்தியும் அதுதான்!



இந்தக் கடன் உதவி ஏதோ ஒரு வகையில் ரணிலைப் பலப்படுத்தியிருக்கின்றது. தமது போராட்டங்களை நியாயப் படுத்த எதிரணியினர் முன் வைத்த காரணங்களைப் பலவீனப்படுத்தியிருக்கின்றது. இதனை ஒரு அரசியல் வெற்றியாக அல்லது சாதனையாகக் காட்டிக் கொள்ள ரணில் முற்படுகின்றார் அதன் மூலமாக மூலம், ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்துவது பட்டாசு கொழுத்தியவர்களின் நோக்கமாக இருந்தது.

கடந்த வருடம் காணப்பட்ட நிலையுடன் ஒப்பிடும் போது மக்கள் அன்றாடம் முகங்கொடுத்த பல நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கின்றது. இது நிரந்தரமானதா, தற்காலிகமானதா என்பது வேறு விடயம். ஆனால் நெருக்கடி குறைந்து, வரிசைகளில் காத்திருக்கும் நிலை முடிவுக்கு வந்திருக்கின்றது. டொலரின் பெறுமதி குறைவடைந்து ரூபாவின் பெறுமதி அதிகரித்திருக்கின்றது. இதனால் இறக்குமதிப் பொருட்களின் விலைகளும் குறைவடைவதற்கு வாய்ப்புள்ளது. தங்க நகைகளின் விலையிலும் சடுதியான வீழ்ச்சியைக் காணமுடிகின்றது.

இவை அனைத்தும், இன்றைய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ரணிலினால் மட்டும்தான் முடியும் என்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்துகின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு நீண்ட காலமாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் கடைப் பிடித்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இருந்துள்ளன. இருந்த போதிலும் போருக்குப் பின்னர் தொடர்ச்சியாக பதவியிலிருந்த ராஜபக்ஷக்களின் காலத்தில் காணப்பட்ட ஊழல், மோசடிகளும் இதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருக்கின்றன. பொருளாதார நெருக்கடி திடீரென இவ்வாறு ஒரு தீவிரமான நிலையை எட்டுவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ இரண்டரை வருடங்களின் முன்னெடுத்த தவறான பொருளாதாரக் கொள்கைகள் அடிப்படையாக அமைந்திருந்தது.

இப்போது ஐ.எம்.எப். இடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள நிதி மறுசீரமைக்கப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கும் வேறு உடனடியான பொருளாதாரத் தேவைகளுக்கும் பயன் படுத்தப் படும். இந்த நிதி கிடைத்திருப்பதன் மூலமாக, வங்குரோத்து நிலை யிலுள்ள நாடு என்ற நிலையிலிருந்து இலங்கை மீண்டு விட்டது என ஜனாதிபதி ரணில் உற்சாகமாகச் சொல்லியிருக்கின்றார் தன் மீதான மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது நாடாளுமன்றத்தில் புதன் கிழமை இவர் நிகழ்த்திய உரையின் நோக்கமாக இருக்கலாம்.

ஐ.எம்.எப். உதவியைப் பெற்றுக் கொண்டதன் மூலம், உள்ளூராட்சித் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்ற கோஷத்தை பலீனப் படுத்துவது ரணிலின் நோக்கமாக இருந்துள்ளது. உள்ளூராட்சித் தேர் தலை விடவும், பொருளாதார மீட்சிதான் முக்கியம் என்பதுதான் ரணில் சொல்ல முற்பட்டிருக்கும் செய்தி. அதே வேளையில், இதனை தன்னுடைய சாதனையாகக் காட்டிக் கொள்வதன் மூலம் இவ்வருட இறுதியில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதும் ரணிலின் மூலோபாயமாக இருக்கலாம்.

ஐ.எம்.எப். நிதி கிடைத்திருப்பதால் தற்போது நாடு எதிர் கொண்டிருக்கும் பெரும்பாலான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டு விட முடியும். இது எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தை பலவீனப்படுத்தி விடும் என்பது ரணிலின் கணிப்பு. ஐ.எம்.எப். விவகாரத்தைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிகள் தடுமாறுவதைக் காண முடிகின்றது. அதற்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுக்கும் போது மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள முடியாது என்பது அவர்களுக்குத் தெரிகின்றது. அதேவேளையில், அதற்கான மாற்று வழியையும் அவர்களால் முன்வைக்க முடியவில்லை.

இந்தப் பின்னணியில் தான் ரணில் வேகமாக காய்நகர்த்துகின்றார் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது தான் இவரது இலக்கு. ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடம் முன்னதாக அதாவது இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அதில் சுலபமாக வெற்றி பெற்று விட முடியும் என்பது ரணின் கணிப்பு.

தற்போதைய நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் மூவர் போட்டியிடுவதற்கான வாய்ப்புள்ளது. ஒருவர் ரணில். மற்றவர் சஜித். மூன்றாவது அநுர. இந்த மூவரும் களமிறங்கும் போது மக்களுடைய தெரிவாக யார் இருப்பார்கள் என்பது குறித்த கருத்துக் கணிப்புக்கள் இப்போது இரகசியமாக நடத்தப்படுகின்றது. இதில் ரணிலுக்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவ தற்கான சில தந்திரோபாயங்களையும் ரணில் வகுத்து வைத்திருப்பதும் தெரி கின்றது. அவை குறித்து மற்றொரு வாரத்தில் பார்ப்போம்.

## காணி அபகரிப்பு தொடர்பில் ரணில் அதிரடி உத்தரவு!

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தண்ணி முறிப்பு கிராமத்தில் உள்ள மக்கள் விவசாயம் செய்கின்ற 229 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தி அதிபர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கைக்கு அமை வாகவே அதிபர் குறித்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.





முல்லைத்தீவு கரைத்துறைபற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தண்ணிமுறிப்பு கிராமத்தில் உள்ள மக்கள் விவசாயம் செய்கின்ற 229 ஏக்கர் காணியை தொல் பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் தொல்பொருள் திணைக்களத்திற்கு சுவீகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந் நிலையில் அக்காணிகளை அளவீடு செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுத்துப்பூர்வமான பணிப்புரையை விடுத்துள்ளார். இக்கடிதம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் அதிபர் ரணில் விக்ரமசிங்கவை நேரடியாக சந்தித்து இந்நடவடிக்கையை உடனடியாக இரத்துசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். அதற்கமைவாக காணி அளவீட்டு பணிகளை உடனடியாக இரத்து செய்யுமாறு அதிபர் செயலகத்தில் இருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தமிழினப் படுகொலையை அங்கீகரிப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குடிவரவுத் துறைக்கு இதன்போது அழைப்பு விடுத்தார். முன்னதாக லிடியா தோர்ப் எம். பி தமிழ் அகதிகள் பேரவையின் பிரதிநிதிகள் குழு கடந்த 6 ஆம் திகதி சந்தித்துப் பேசினார். இதன்போது தமிழ் அகதிகளின் கதைகளையும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் இலங்கையில் தமிழ்மக்கள் மீதான அரசாங்கம் அரச படைகள் நிகழ்த்திய அழிவுகளையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிலையில், அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

18 மார்ச் 2023 முதல் 24 மார்ச் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 21 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 18 மார்ச் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நவரத்தினம் ஸ்ரீகாந்தா

மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நவரத்தினம் ஸ்ரீகாந்தா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 24 மார்ச் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நவரத்தினம் ஸ்ரீகாந்தா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 26 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 59வது ஆண்டுசிரார்த்த தினம்

### திரு சுப்பிரமணியம் கந்தையா
### திருமதி பார்வதி கந்தையா



அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 59வது ஆண்டு சிரார்த்த தினம் 20 மார்ச் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## கந்தர்மடம் மக்கள் ஒன்றியத்தின் இராப்போசன விருந்து நிகழ்வு!

எமது ஒன்றியத்தின் மார்ச் 25ம் திகதி இரவு விருந்து நிகழ்வுக்கான நடவடிக்கைகள் சுமார் 3 ஆண்டுகளின் பின்னர் 3300 McNicoll Ave Scarborough ON M1V 5J6 என்ற முகவரியிலுள்ள Baba Banquet மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற நீங்கள் ஒவ்வொருவரும் உங்களால் முடிந்த ஆதரவையும் பங்களிப்பையும் விழா குழுவினருக்கு தயங்காமல் தயவு செய்து வாரி வழங்குங்கள்.

நன்றிகள்

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



16 மார்ச் 2023 வியாழக்கிழமை கனடாவில் வாழும் செல்வன் அருண் சூர்யாவின் 7வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் அருண் சூர்யா தனது பெற்றோர்களுடனும் உறவுகளுடனும் இணைந்து 18 மார்ச் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




18 மார்ச் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா இணையர்களின் 23வது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



18 மார்ச் 2023 சனிக்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 மார்ச் 2023 ஞாயிற்றுகிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சர்வானந்தன் பவளராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினோதனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் வினோதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




20 மார்ச் 2023 திங்கட்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா தம்பதிகளது 59வது ஆண்டு சிரார்த்த தினமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



21 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்






22 மார்ச் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனியின் நான்காவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெனனி தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



23 மார்ச் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜன் கௌசிகா இணையர்களது நான்காவது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்புகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



24 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நவரத்தினம் ஸ்ரீகாந்தா அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN $93



weekly - Plus TAX

$0 down @ 6.58%

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

CANADIAN BUILT

**2023 CIVIC LX Model**

## LEASE TO OWN $120



weekly - Plus TAX

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr - 7.59%

**2023 CR-V**

## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

**2023 CR-V HYBRID Available**

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# தட்டுவன்கொட்டியில் தாண்டவமாடும் சிவன்

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே,கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. கரைசிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்து தான் உள்ளேவர வேண்டும். அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள். இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்று பொருள்.

யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின் போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம். அத்தோடு சேர்த்து ஒரு விருந்தகம். அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால் வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச் சின்னம் உண்டு. இலங்கைத்தீவை இரண்டு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந் தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.

இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில், தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்பட வேண்டியது.

அச்சிலையின் அழகியல் அம்சங்களைக் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக் கூடிய ஒரு சிலையாக இருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன்.இன்று இக்கட்டுரையில் நான் கூறவருவது அச் சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச, பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம்.அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது. தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேச சபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத் தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில், சிவபூமி அறக் கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர் நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு.

ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்? அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல் வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?



சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம். அது தான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை. மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு. இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப் புத்தியை அரசியல்வாதிகள் இலகுவாகக் கையாள்வார்கள்.

பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால் தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது தான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்ட வேண்டும். இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்ட வேண்டும். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல் கீழான வரும் அல்ல என்ற அடித் தளத்தின் மீது தான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும். எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும்.மத மேலாண்மையின் மீது அல்ல.இந்த அடிப் படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும் போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும் போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது.

அதாவது மதப்பல்வகைமை வேறு மத மேலாண்மை வேறு.

அண்மை ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது. இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர். இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன் மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன. பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று. எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத் தான் அணுக வேண்டும். ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

இப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது. இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும் போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத் தான் அணுகவேண்டும். ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப் பல்வமைமயை பலியிட வேண்டும் என்பதல்ல. ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப் பல்வகமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது(1924) ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கன்டி பேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட போது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் சீலஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது. இது தொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம். அக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர். செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு, தகனம் செய்யப்பட்டது. தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து, தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.


கட்டுரையாளர்:

யாழ்ப்பாணத்தில் இருந்து

– நிலாந்தன் –




எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது. அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது. குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவு தான். ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக, மோதலாக மாறவில்லை.

ஆனால், 2009க்குப் பின் எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறை மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண் பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு அக முரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடத்தில், இன்னொருபுறம், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் "எல்லைக் கற்களாக" புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் இராணுவ அரசியற் சூழலில் தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கி விட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில், ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல, பௌதீகவியல் வியாக்கியானமும் உண்டு.அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப் படுகிறது (cosmic dance). ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு. உப்புக் காற்றில் யுத்த வெற்றிச் சின்னங்களின் மத்தியில்,சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்? பொறுத்திருந்து பார்ப்போம்.

# இது நம்ம யாழ்ப்பாணம் 17

# யாழ்ப்பாணத்திற்கு அடையாளத்தைக் கொடுத்த மில்க்வைற் உற்பத்திகள்!

யாழ்.நகரில் இருந்து ஈழநாட்டிற்காக
- பகீரதன் -

சிறிய கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதாக இருந்தாலும் கூட அற்குத் தேவையான இயந்திர சாதனங்களை நாம் வெளிநாடுகளிலிருந்து தான் பெருமளவு செலவில் இறக்குமதி செய்கின்றோம்.



யாழ்ப்பாணத்தின் முன்னோடிக் கைத்தொழில்களில் ஒன்றான மில்க்வைற் யாழ்ப்பாணத்திலேயே தயாரிக்கப்பட்ட இயந்திர சாதனங்களைக் கொண்டு தான் உற்பத்தி செய்யப்பட்டது.

இப்போதும் அந்த இயந்திரகளைக் கொண்டு தான் அதன் உற்பத்திகள் இடம் பெறுகின்றது. சில தினங்களுக்கு முன்னர் மில்க்வைற் நிறுவனத்துக்குச் சென்றபோது அவற்றை நேரில் பார்க்க முடிந்தது.

1927ஆம் ஆண்டில் ஒரு குடிசைக் கைத்தொழிலாக மு.கந்தையா என்பவரால் மில்க்வைற் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது இலங்கைத்தீவு முழுவதிலும் வரவேற்கப்படும் ஒரு சவர்க்காரமாக அது வளர்ச்சியடையும் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். ஆனால் சில வருடங்களிலேயே இலங்கைத்தீவின் பல பகுதிகளிலும் ஏழைகளின் சோப் என அது வரவேற்கப்பட்டது.

ஆரம்பத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் தான் இங்கு பணி புரிந்தார்கள். ஆரம்ப காலங்களில் தலையில் சுமந்தும் சைக்கிள்களிலும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. சுதந்திரத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட முக்கியமான ஒரு சுதேச நிறுவனமாக இதனைக் கருதலாம்.

அப்போதே பிரித்தானியர்களின் லிவ்வர் பிரதேர்ஸ் நிறுவனத்துடன் போட்டி போட்டுக் கொண்டு மில்க்வைற் விற்பனை செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1950க்கு பின்னர் மில்க்வைற் வளர்ச்சி துரிதமாக இருந்தது. கந்தையாவின் மகன் கனகராஜா இதனைப் பொறுப்பேற்ற பின்னர் பல புதிய விடயங்களில் அக்கறை காட்டியதுடன் விற்பனையையும் விரிவாக்கினார்.

ஆரம்பத்தில் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்பட்டாலும் பின்னர் தென் பகுதியை நோக்கியும் மில்க்வைற் வாகனங்கள் செல்லத் தொடங்கின. தென் பகுதியிலும் ஏழைகள் நடுத்தர மக்கள் மத்தியில் இதற்கு நல்ல வரவேற்பு காணப்பட்டது.

பரந்தன் இரசாயணத் தொழிற்சாலை மில்க்வைற் உற்பத்திக்குத் தேவையான எரிசோடாவைத் தாராளமாக வழங்கியது. இந்த இரசாயணத் தொழிற்சாலை வட பகுதியில் அமைந்திருந்தது மில்க்வைற் நிறுவனத்துக்கு பலத்தைக் கொடுத்தது.

எரிசோடா தான் சவர்க்காரம் தயாரிப்பதற்கான பிரதான மூலப்பொருள். இதனை விட தேங்காய் எண்ணெயும் யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைத்தது. உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டே சோப்பை தயாரிக்கக் கூடியதாக இருந்தமையால் குறைந்த விலையில் அதிகளவு உற்பத்தியை கனகராஜாவினால் மேற்கொள்ள முடிந்தது. ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் சோப் என வர்ணிக்கப்பட்ட மில்க்வைற் சோப் கட்டி ஒன்று 1970 களில் 15 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. அதனால் அனைத்துத் தரப்பினரும் மில்க்வைற்றின் பாவனையாளர்களாகினார்கள்.

இதனைவிட கனகராஜா மற்றொரு புரட்சியையும் செய்தார். மில்க்வைற் நீல சோப் ஒன்றையும் அவர் அறிமுகப்படுத்தினார். பாடசாலை மாணவ மாணவிகளின் சீருடைகள் வெள்ளை வேட்டிகள் சேட்கள் என்பவற்ற துவைப்பதற்கு சோப்பை விட நீலப்பவுடரை தனியாக வாங்க வேண்டிய நிலை அப்போது இருந்தது. அதாவது பாவனையாளர்களுக்கு இது இரட்டிப்புச் செலவு. அதனை விட நீலப் பவுடரை அளவாகப் பயன்படுத்தா விட்டால் உடைகளின் வர்ணங்கள் மாறிவிடும்.

இந்த நிலையை அவதானித்த கனகராஜா மில்க்வைற் நீல சோப்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்திய போது அதற்கு கணிசமான வரவேற்பு கிடைத்தது. குறைந்த விலையில் அவரால் இந்த நீல சோப்கள் சந்தைப்படுத்தப்பட்டன. இவ்வாறு நீல சோப் எதுவும் அப்போது சந்தையில் இருக்கவில்லை. நீல சோப் உற்பத்தியைப் பொறுத்தவரையில் கனகராஜா இலங்கையில் ஒரு முன்னோடியாக இருந்தார்.




சந்தையில் எது தேவையாக இருக்கின்றதோ அதனைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்பதில் அவர் அக்கறையாக இருந்தார். அதுதான் விற்பனையாகும் என்ற தொழில்நுணுக்கத்தையும் அவர் படித்திருந்தார்.

கனகராஜாவின் இந்த முயற்சிகளால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் இருந்த மில்க்வைற் தொழிற்சாலை பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டது. இரண்டு – மூன்று பேருடன் ஆரம்பிக்கப்பட்ட அந்த தொழிற்சாலையில் சுமார் 150 பேர் வரையில் பணிபுரியும் நிலை உருவாகியது. புதிய கட்டங்களும் அமைக்கப்பட்டன.

இந்த நிலையில் கனகராஜாவின் மற்றொரு புரட்சிகரமான செயற்பாடு தொடர்பாகவும் சொல்வது அவசியம். சோப் உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள் அனைத்தையும் அவர் யாழ்ப்பாணத்திலேயே செய்துகொள்வதற்கு முயன்றார். இரும்பு வேலைகளில் யாழ்ப்பாணத்தவர்கள் அந்தக் காலத்தில் திறமையானவர்களாக இருந்துள்ளார்கள். இரும்புப் பொருட்களைத் தயாரிப்பதில் வல்லவரான ஒருவர் மூலமாக இந்த இயந்திரங்களை தனக்குத் தேவையான வகையில் கனகராஜா வடிவமைத்தார். சோப் உற்பத்தியில் இவ்வாறு வெற்றிக் கொடி நாட்டிய கனகராஜா அடுத்த கட்டமாக மற்றொரு உற்பத்தியிலும் தனது கவனத்தைச் செலுத்தினார். இதுவும் சந்தை நிலைமைகளை ஆராய்ந்து அங்குள்ள தேவையை உணர்ந்த ஒரு முயற்சி தான்!




வீடுகள் தோறும் தேடுவாரற்றுக் கிடக்கும் வேப்பம் விதைளை வாங்கி அதிலிருந்து நான்கு விதமான தயாரிப்புக்களைச் செய்தார். ஒரு கிலோ வேப்பம் விதைகளைக் கொடுத்தால் ஒரு மில்க்வைற் தொப்பி என்று அவர் அறிவித்தார். இதனால் வேப்பம் விதைகள் அவரது தொழிற்சாலையில் குவியத் தொடங்கியது. வேப்பம் விதைகளிலிருந்து அவர் தயாரித்தவைகளில் முதன்மையானது நீம் என்ற பெயரில் சந்தைக்கு வந்த நுளம்பு விரட்டி. இது சாம்பிராணி போலப் பயன்படுத்தக் கூடியது. காற்றையும் சுத்திகரிக்கும்.

இரண்டாவது வேப்பம் எண்ணெய் கலந்த நீம் சோப். மூன்றாவது வேப்பம் எண்ணெய். நான்காவது நீமியா என்ற பெயரிலான இயற்கை உரம் என்பன தயாரிக்கப்பட்டன. இவற்றுக்கான இயந்திரங்களையும் அவர் சொந்தமாகவே தயாரித்தார்.

நீம் பவுடர் நிமீயா இயற்கை உரம் என்பவற்றுக்கான தேவை சந்தையில் தற்போதுள்ள போதிலும் இவற்றைத் தயாரித்து சந்தைப் படுத்துவதற்கு யாரும் இல்லை என்ற நிலை இப்போதும் தொடர்கின்றது.

தென்னிலங்கையின் பலம் வாய்ந்த காப்பரேட் கம்பனியான லிவ்வர் பிரதேர்ஸ் நிறுவனம் சவரின் பார்சோப் என்ற பெயரில் புதிய பார்சோப் ஒன்றை சந்தையில் இறக்கியது. வியாபாரப் போட்டிகள் தீவிரமடையும் போது இவ்வாறான புதிய உற்பத்திகள் மக்களைக் கவர்வதற்காக சந்தைக்கு விடப்படுவது வழமை தான். இதற்குப் போட்டியாக மில்க்வைட் பார்சோப் என்ற பெயரில் பார்சோப் ஒன்றை கனகராஜா களமிறக்கினார். வியாபாரப் போட்டிகளுக்கு அவர் அஞ்சியவரல்ல.

வடக்கு கிழக்கில் போர் தீவிமடைந்த 1980 களின் பிற்பகுதியிலும் 90களின் முற்பகுதியிலும் வடபகுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. தடை விதிக்கப்பட்ட பொருட்களில் சோப் பிரதானமானது. எந்தவகையான சோப்பையும் வடபகுதிக்குக் கொண்டு வர முடியாமல் இராணுவம் தடுத்தது. இந்த நிலையில் தமது மூலப்பொருட்களின் கையிருப்பு முடியும் வரை மில்க்வைற் உற்பத்திகள் வந்து கொண்டுதானிருந்தது.

ஆனால் போரின் உச்சமாக பரந்தன் இரசாயணத் தொழிற்சாலை மூடப்பட்டது. எரிசோடாவைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணத்துக்குள்ளேயே தேங்காய் எண்ணெயைப் பெற முடியாத நிலையும் ஏற்பட்டது. இதனை விட இடப்பெயர்வு போரின் பல்வேறு விளைவுகளால் மில்க்வைற் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. சில காலம் மூடப்பட்டது. இப்போதும் மில்க்வைற் செயற்பட்டாலும் குறைவான உற்பத்தி தான் செய்யப்படுகின்றது. கனகராஜாவின் மறைவைத் தொடர்ந்து அவரது சகோதரின் இரண்டு மகன்களான தவகோபால் விஜயகோபால் ஆகியோர் இதனை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

(22ம் பக்கம் பார்க்க)

# தமிழரின் அரசியலை வழி நடத்தும் நம்பிக்கைகள்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



அரசியலில் மிகவும் துல்லியமான கணிப்புக்களை எவராலும் வழங்க முடியாது. சில அனுமானங்களை செய்ய முடியும். உலகின் முன்னணி புத்திஜீவிகளில் ஒருவரான பேராசிரியர் நோம்ஷொம்ஸகி, கூறுவார், என்னால் நாளைய காலநிலையை எதிர்வு கூற முடியாது.

அதாவது, அரசியலிலும், உலக விவகாரங்களிலும் ஒருவர் என்னதான் நிபுணத்துவம் வாய்ந்தவராக இருந்தாலும் கூட, எதிர்காலம் தொடர்பில் அப்பழுக்கற்ற பார்வையை எவராலும் முன்வைக்க முடியாது. பிஸ்மார்க், கூறியது போன்று, நான் என்ன தான் ஆற்றல் வாய்ந்தவனாக இருந்தாலும் கூட, கடிகாரத்தின் முள்ளை மாற்றி வைப்பதால், காலத்தை நகர்த்திவிட முடியாது. எனவே மனிதனின் ஆளுமையென்பது எல்லையற்றதல்ல. அது எல்லைக்குட்பட்டது.

ஒரு எல்லைக்குட்பட்ட நம்மால், ஒரு எல்லைக்குள்தான் சிந்திக்கவும் செயலாற்றவும் முடியும். இதற்குள் நம்மை நாமே வல்லுனர்களென்று கருதிக் கொள்வதெல்லாம் நமது தனிப்பட்ட ஆர்வங்கள் சார்ந்தது.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கு என்ன நடைபெறப் போகின்றது? இதற்கு எவ்வாறு பதிலளிக்க முடியும்? தாயுமானவர் கூறுவது போன்று, நாமொன்றும் அறியோம் பராபரமேயென்று கூறி விட்டு, அமைதியடைந்து விடவும் முடியாது. பதிலளிக்கவும் வேண்டும் ஆனால் அந்த பதிலில் நிதானமும் தெளிவுமிருக்க வேண்டும். இதுவரையில் என்ன நடந்தது என்பதில் தெளிவிருக்கும் போது தான், இனிமேல் நடைபெறப் போகும் அல்லது, நடைபெறலாமென்று நாம் எதிர்பாக்கும் விடயங்களின் சாத்தியப்பாட்டை ஆராய முடியும்? ஒரு விடயத்தை சிலரும், சிலவேளைகளில் பலரும் கூறுவதை காணமுடிகின்றது.

அதாவது இந்தியாவை கையாண்டிருக்கலாம், அமெரிக்காவை கையாண்டிருக்கலாம், அதற்கான வாய்ப்பு இப்போதுமுண்டு, ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் அதனை சரியாக புரிந்து கொண்டு கையாள முடியாதவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு கூறுபவர்களிடம் ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பை வழங்கினால், அவர்களால் ஒரு வாரத்திற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் போகலாம்.

ஏனெனில் இது பேசுவது போன்று, கட்டுரையெழுதுவது போன்று, இலகுவான விடயங்கள் அல்ல. இன்று தமிழ்ச் சூழலில் அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருக்கின்ற சிலர் ஆற்றல்லற்றவர்கள் அல்லர். குறிப்பாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாக இருக்கின்ற சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா போன்றவர்களுக்கு ஆற்றலுண்டு. அவர்களுக்கு இந்த விடயத்தில் நீண்ட அனுபமுண்டு.

அதே போன்று, தமிழரசு கட்சியில் சுமந்திரனும் ஆற்றலுள்ளவர் தான். அதே போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் விடயங்களை அறிந்தவர் தான். அதனை மறுதலிக்க முடியாது. ஆனால் இவர்களால் என்ன செய்ய முடியும்? தேர்தல் அரசியலுக்காக சில விடயங்களை கூற வேண்டிய நிர்பந்தத்திலிருந்தாலும், இவர்கள் கூறிவரும் விடயங்கள் எதனையும், அடைய முடியாதென்பதை அவர்களும் அறியாமலிருக்க வாய்ப்பில்லை. ஒரு அரசியல் கட்சியென்பதால் தங்களால் முடியாதென்றும் மக்களிடம் கூற முடியாது. ஒரு வகையில் அரசியல் கட்சிகளின் நிலைமை திரிசங்கு நிலைதான்.

இன்றைய தமிழ் தேசிய அரசியலை ஆழமாக நோக்கினால், ஒரு விடயத்தை காணலாம். அதாவது, இன்று தமிழ் தேசியமென்பது சில நம்பிக்கைகளினால் மட்டுமே அசைகின்றது. முதல் நம்பிக்கை, சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களினால் ஈழத் தமிழ் மக்களுக்கு நன்மை கிட்டும். இரண்டாவது, நம்பிக்கை, இந்தியாவிற்கு ஒரு தேவையேற்படும், அப்போது வேறு வழியில்லாமல் ஈழத் தமிழர்களை நோக்கித் தான் வர வேண்டும் ஏனெனில், இலங்கைக்குள்



சீனா வலுவாக காலூன்றி விட்டது, அதனை கையாள முடியாமல் இந்தியா தடுமாறுகின்றது.

மூன்றாவது நம்பிக்கை, புலம்பெயர் சமூகம் பற்றியது. புலம் பெயர் சமூகம் பலமாக இருக்கின்றது, மேற்குலக நாடுகளில் அழுத்தங்களை ஏற்படுத்தும் ஆற்றலோடிருக்கின்றது. அவர்களின் அழுத்தங்களால் ஏதோவொரு வகையில் தமிழ் மக்களுக்கு சாதகமான சூழல் உருவாகும்.

நான்காவது, சீன அமெரிக்க உலகளாவிய போட்டியின் காரணமாக, இலங்கை முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த பின்புலத்தில் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் ஈழத் தமிழர்கள் இருப்பதால், அமெரிக்காவின் நகர்வுகளுக்கு தமிழர்கள் தேவைப்படுவார்கள், இது தமிழர்களுக்கு சாதகமானது. மொத்தத்தின் இவற்றின் வாயிலாக ஈழத் தமிழர்களுக்கு விமோசனமுண்டு.

யுத்தமில்லாத கடந்த 13 வருடகால தமிழ் தேசிய அரசியலானது இவ்வாறான நம்பிக்கைகளின் வழியாகத் தான், நகர்ந்திருக்கின்றது.

இவைகள் அனைத்துமே சிலரிடமும், பலரிடமும் உள்ள எதிர்பார்ப்புக்கள் மட்டுமே. முதலாவது நம்பிக்கையை நோக்குவோம், சர்வதேச அழுத்தங்களின் வழியாக தமிழ் மக்களுக்கு சில விடயங்கள் கிடைக்கும். இதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. நாங்கள் எதிர்பார்க்கலாம், எங்களுடைய அறிவின் எல்லைக்குட்பட்டு, அனுமானிக்கலாம். முதலில் சர்வதேச அழுத்தங்கள் என்பதால் நாம் எதை விளங்கிக் கொள்கின்றோம்? இது தொடர்பில் முன்னைய பத்திகளிலும் சில விடயங்களை குறிப்பிட்டிருக்கின்றேன்.

முதலில் சர்வதேச அழுத்தமென்பது, மேற்குலக அழுத்தம் மட்டுமே. அதாவது, அமெரிக்கா, பிரித்தானியா, கனடா அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் மூலம் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களாகும். மனித உரிமையின் மீதான கரிசனையே, இந்த அழுத்தங்களின் அடிப்படையாகும். ஒரு வேளை நாம் மனித உரிமை தொடர்பில் பேசா விட்டாலும் கூட, அவர்கள் பேசுவார்கள். ஏனெனில் அது அவர்களின் வெளிவிவகார அணுகுமுறையாகும். இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது, இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில், மேற்படி நாடுகள் தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

இந்த நாடுகளின் அழுத்தங்கள் நேரடியாகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஊடாகவும் முன் வைக்கப்படுகின்றன. சர்வதேச அழுத்தமென்பது, இதுதான். இது தான் கடந்த 13 வருடங்களாக இடம் பெற்றுவரும் அழுத்தங்கள்.

இந்த அழுத்தங்களை தீவிரப்படுத்துங்கள் என்னும் பெயரில்தான், ஆண்டுகள் தோறும், தமிழ் தேசிய கட்சிகளும் சிவில் சமூக குழுக்களும், புலம்பெயர் குழுக்களும் கடிதங்களை அனுப்பியிருந்தன, பயணங்களையும் மேற்கொண்டிருந்தன. எதிர்பார்த்த விளைவுகள் கிடைத்தனவா? இல்லை. ஏன் அவ்வாறு நடைபெறவில்லையென்பதற்கு நம்மில் சிலரிடமுள்ள இலகுவான பதில், அரசியல்வாதிகள் இதனை சரியாக கையாளவில்லை. அவர்களுக்கு விடயங்கள் விளங்கவில்லை. இதிலுள்ள அடிப்படையான விடயம் அரசியல்வாதிகளால் இந்த விடயத்தில் ஒரு கட்டத்திற்கு மேல் எதனையும் செய்ய முடியாது. கடிதங்களை அனுப்பலாம், தேர்தல் அரசியலுக்காக, தங்களுடைய கடிதங்களிலுள்ள விடயங்களைத் தான் ஆணையாளர் உள்வாங்கியிருக்கின்றார் என்று அறிக்கை வெளியிடலாம். இந்த அறிக்கைகள் தேர்தல் அரசியல் தொடர்பானது. அதே போன்று இன்னொரு கட்சி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதை சுமந்திரன் தடுக்கின்றார், என்று அறிக்கை வெளியிடலாம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதை சுமந்திரனால் எவ்வாறு தடுக்க முடியும்? நிச்சயம் முடியாது. இவ்வாறான கதைகளெல்லாம் தேர்தலில் ஒருவரை தோற்கடிப்பதற்கு மற்றைய கட்சி கூறும் கதைகள். ஆனால் அறிவுள்ள ஒரு தரப்பு இவ்வாறான கதைகளை ஆராயமல் உச்சரிக்கக் கூடாது.

இரண்டாவது இந்தியா தொடர்பானது. இந்தியா தொடர்பில் தெளிவான பார்வை, தமிழ் சூழலில் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இங்கும் பிரச்சினை இந்தியா தொடர்பான எதிர்பார்ப்புக்கள் தான். இதில் அரசியல்வாதிகளிடம் பிரச்சினையில்லை. ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் என்போரிடம் தான் பிரச்சினையுண்டு. ஒரு தரப்பினர், இந்தியாவை ஈழத் தமிழர்களின் வேலையாள் போன்று நோக்குகின்றனர். தாங்கள் விரும்பும் ஒன்றை இந்தியா செய்ய வேண்டும்.

இரண்டாவது, தரப்பினர், இந்தியாவென்னும் ஒரு பிராந்திய சக்தியின் தேசிய பாதுகாப்பே, ஈழத் தமிழர்களில் தான் தங்கியிருக்கின்றது என்றவாறு புனை கதைகளை எழுத முற்படுகின்றனர். இரண்டுமே அடிப்படையிலேயே தவறானது.

இந்தியா, நாம் விரும்புவதையெல்லாம் செய்யாது என்பதை நாம் முதலில் குறித்துக் கொள்ளவேண்டும். இந்தியாவின் கொள்கை, அன்றிலிருந்து இன்று வரையில், ஒன்றாகவே இருக்கின்றது.

அதாவது, இலங்கை ஒரு நட்புநாடு. அந்த நட்புநாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதில் தலையீடு செய்யும் கடப்பாடு இந்தியாவிற்குண்டு. அன்றைய சூழலில் இந்திராகாந்தி கூறியது ஒன்று தான் அதாவது, ஆறு கோடி தமிழ் மக்களை கொண்டிருக்கும் இந்தியாவானது, அருகிலுள்ள இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது, அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இப்போதும் இந்தியாவின் நிலைப்பாடு இதுதான். ஆனால் அதற்காக சிங்களவர்களின் குரல்வளையை நசிக்க வேண்டுமென்று, தமிழர்கள் எதிர்பார்த்தால், அதனை இந்தியா ஒரு போதும் செய்யாது. ஏனெனில் இந்திராகாந்தி, அதன் பின்னர், அவரது புதல்வர் ராஜீவ்காந்தி ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது குரல்வளையை பிடிக்கும் சிறிய அணுகுமுறையிருந்தது உண்மை தான். ஒரு புறம் ஈழ ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்த இந்தியா, பின்னர் அதனையே ஒரு காரணமாகக் கொண்டு இராணுவத் தலையீட்டை மேற்கொண்டது. இந்தியாவின் அன்றைய அணுகுமுறை இராணுவ ரீதியானது. ஆனாலும் இந்தியா ஈழத் தமிழர்களின் பெயரில் தலையீட்டை முன்னெடுத்த போதிலும் கூட, அதன் மூலம் இந்தியாவிற்கு மோசமான அனுபவங்களே கிடைத்தது. இறுதியில் விரல்களை சுட்டுக் கொண்ட அனுபவத்தோடு, இந்தியா வெளியேறியது.

மூன்றாவது நம்பிக்கை புலம்பெயர் சமூகம் தொடர்பானது. தாயக தமிழ் மக்களுக்கான சர்வதேச குரலாக புலம் பெயர் சமூகம் வளர்சியடைந்திருக்கின்றது என்பது உண்மை தான். அதனை மறுதலிக்க முடியாது ஆனால் இது தொடர்பில் அளவுக்கதிகமான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. புலம்பெயர் சமூகம் தலையீடு செய்வதால் தான் மேற்குலம், இலங்கை விடயத்தில் சில அழுத்தங்களை பிரயோகிப்பதாக கருதுவது தவறானது.

அண்மையில் கனடிய வெளிவிவகார விடயங்களில் நிபுனத்துவம் வாய்ந்த பேராசிரியர் கிம் நொஷலை, எனது மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையத்திற்கான நேர்காணல் செய்திருந்தேன். இதன் போது அவர் சில விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தார். அதாவது, கனடாவின் வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமைகள் அடிப்படையானது. மேலும் கனடாவின் அணுகுமுறை தனியானது அல்ல, அதன் நேச நாடுகளின் அணுகுமுறையின் அங்கமாகும்.

ஒரு வேளை தமிழ் புலம்பெயர் சமூகம் அதன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாலும் கூட, கனடாவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. மேலும் கனடாவில் இடம்பெறும் புலம்பெயர் செயற்பாடுகளை உள்நாட்டு விவகாரமாக நோக்க வேண்டும். உதாரணமாக இனப்படுகொலை வாரத்தை அனுமதிப்பது. இவைகள் உள்ளூர் வாக்காளர்களை திருப்திப்படுத்தும் செயற்பாடுகளேயன்றி, கனடாவின் வெளிவிவகார (22ம் பக்கம் பார்க்க)

# அந்தியேட்டி அழைப்பிதழ்

45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

WE KINDLY INVITE YOU TO THE 45TH DAY OF REMEMBERANCE
HONOURING OUR BELOVED



## திரு தாமோதரம்பிள்ளை முரளிதரன்
## (தாமு முரளி)

MURALIHARAN THAMOTHIRAMPILLAI

SATURDAY | 11AM - 3PM
25TH MARCH 2023

**Mirage Banquet & Convention Centre**
1917 Albion Rd, Etobicoke, ON M9W 5S8

# பாவனைப் போரும் செயற்பாட்டு அரசியலும்

பலரும் கருதியதைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து விட்டது. இந்த உடைவினால் தனித்து விடப்பட்டிருப்பது தமிழரசுக் கட்சியே. ஆனாலும் அது தன்னைப் பலமானதாகக் கருதிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், அதனுடைய வீட்டுச் சின்னமாகும். எத்தகைய நிலையிலும் மக்கள் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிப்பார்கள் என்ற பலமான எண்ணம் தமிழரசுக் கட்சியினருக்குண்டு. இதுவே அவர்களுடைய தைரியமாகும்.

இதற்குக் காரணம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வீட்டுச் சின்னமாகவே மக்களிற் பலரும் அறிந்துள்ளனர். தமிழரசுக்கட்சிக்கு விடுதலைப் புலிகள் உருவாக்கிக் கொடுத்த அருமையான வாய்ப்பிது. இதனால் இளைய தலைமுறையினரின் மனதில் கூட்டமைப்பு என்றால் அது வீட்டுச் சின்னம் என்ற புரிதலே உள்ளது. இன்னொன்று கிராமப்புற மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள உடைவைப் பற்றியோ, தமிழரசுக் கட்சி தனித்து விடப்பட்டிருப்பதைப் பற்றியோ எதுவுமே தெரியாது. இதெல்லாம் தமிழரசுக் கட்சிக்கு வாய்ப்பாகவே உள்ளன.

வெளியே ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்றவை ஒன்றிணைந்து கூட்டாக நிற்கின்றன. இவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தம்மைப் பிரகடனம் செய்துள்ளன. தமக்கான சின்னம் குத்து விளக்கு என்றும் அறிவித்துள்ளன. எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முறைப்படி பதிவு செய்யவுள்ளதாகவும் இந்த அணி கூறுகின்றது.

இருந்தாலும் இந்த அணி பெரும் சவாலை எதிர்கொண்டே உள்ளது.

கூட்டமைப்பின் பெயரில் ஒரு பெரிய அணியாக இயங்கினாலும் இவர்களுடைய குத்துவிளக்குச் சின்னம் மக்களுக்குப் புதிது. இந்தப் புதிய சின்னத்தை மக்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும் என்றால் வீட்டுச் சின்னத்தை நிராகரிக்கச் செய்ய வேண்டும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக வீட்டுச் சின்னத்தை மக்களிடம் அறிமுகப்படுத்தி விட்டு இப்பொழுது அதை மறுதலிப்பது என்றால் அது மக்களிடம் குழப்பத்தை உண்டாக்கும். அதற்கான நியாமான காரணத்தை, தெளிவான விளக்கத்தை அடிமட்ட மக்கள் வரையில் (கிராமங்கள் வரையில்)கொண்டு செல்ல வேண்டும். அதை ஒரு பெரிய வேலைத்திட்டமாக முன்னெடுக்க வேண்டும். அணியில் உள்ள தலைவர்கள் தொடக்கம் அடிமட்ட உறுப்பினர்கள் வரையில் இதைச் செய்ய வேண்டும். அவர்கள் கிராமங்களை நோக்கிச் செல்ல வேண்டும். இதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும். பொருத்தமான திட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தனியே ஊடகங்களை மட்டும் நம்பி இருக்க முடியாது.

ஏனென்றால், இந்தப் பிளவைக் குறித்து ஊடகங்களும் அரசியல் எழுத்தாளர்களும் இன்னும் தெளிவான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. பலரும் இரண்டு தரப்பையும் அனுசரித்துப் போவதையே காணக் கூடியதாக உள்ளது. அண்மையில் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சி நடத்திய பெண்கள் நாள் நிகழ்விலும் ஆனையிறவில் நடராஜர் சிலை திறப்பின் போதும் அரசியல் எழுத்தாளரான கே.ரி. கணேசலிங்கம் கலந்து கொண்டிருந்தார். நாளைக்கு இன்னொரு நிகழ்வை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (குத்துவிளக்கு அணி) அழைத்தால் அங்கும் இவர் செல்லக்கூடும். இதெல்லாம் அவருடைய சொந்த விருப்பமும் தெரிவுமாக இருக்கலாம். அதற்கான உரிமை அவருக்குண்டு. இப்படித்தான் பலரும் உள்ளனர். ஆனால், அரசியல் ஆய்வாளர்கள் என்று கூறிக் கொண்டு, மக்களுக்கு வழிகாட்டுகிறோம் என்று இப்படிச் செயற்பட முடியாது.



உண்மையில் எந்த அணி சரியான நிலைப்பாட்டில் உள்ளது? எது தவறாகச் செயற்படுகிறது என்பதை இவர்கள் தெளிவாக மக்களுக்குச் சொல்ல வேண்டும். மக்களுக்கு மட்டுமல்ல, சம்மந்தப்பட்ட தரப்பினருக்கும் தான். அதைச் சொல்லாத வரையில் குத்துவிளக்கு அணியினர் தாமே மக்களுக்கு உண்மை நிலவரத்தைச் சொல்ல வேண்டும்.

இதேவேளை கூட்டமைப்பில் நடந்துள்ள பிளவில் நாம் ஒரு தெளிவான பிரிகோட்டைப் பார்க்க முடிகிறது. இரண்டு அணிகளும் மிகத் தெளிவான அரசியற் பயணப் பாதையைக் கொண்டன என்பதே அதுவாகும். தமிழரசுக் கட்சியோ எப்போதும் பாவனைப் போர் செய்யும் வழிமுறையைக் கொண்டது.

1960களுக்குப் பின்னர் அது எத்தகைய போராட்டங்களையும் செய்ததில்லை. அதற்கு முன்பு செய்த சத்தியாக்கிரகப் போராட்டமே அதனுடைய ஒரே அரசியல் முதலீடாக இன்னும் உள்ளது. தவிர, உரத்துப் பேசுதலே (பாவனைப் போரே) அதனுடைய வழிமுறையாகும். இப்போது கூட கூட்டமைப்பிலுள்ள சிறிதரன், சாணக்கியன் போன்றோரே தமிழரசுக் கட்சியின் முன்னணிப் பிரமுகர்களாக உள்ளனர். இவர்களுடைய உரத்த குரலே இதற்குக் காரணம்.

அடுத்த நிலையில் உள்ளவர் சுமந்திரன். அவரும் பல சந்தர்ப்பங்களிலும் அப்படியே நடந்து கொள்கிறார். கட்சிக்குள்ளும் மக்கள் மத்தியிலும் சுமந்திரனின் நடத்தைகள் இப்படியே உள்ளன. ஆனாலும் அவரிடமிருக்கும் மிரட்டும் தொனியே அவரை மேலெழுப்பிக் காட்டுகிறது. உண்மையில் பெரும்பாலானவர்களுக்கு இந்த மாதிரி உரத்துப் பேசுவோரே (பாவனைப் போர் வீரர்களே) விருப்பத்துக்குரியவர்களாக உள்ளனர் போலும். இல்லையென்றால் இவர்கள் எப்படி முன்னணியில் நிற்க முடியும்? இவர்களுக்குத்தான் ஊடகங்களும் முன்னுரிமை அளிக்கின்றனவே!

ஏனைய ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் அணியினரோ அப்படியல்ல. அவர்களைப் பொறுத்தவரையில் அளவுக்கு அதிகமாகப் பேசுவதை விட எதையாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று சிந்திப்பவர்கள். தொடக்கத்திலிருந்தே செயற்பாட்டு அரசியல் வழி முறையைக் கொண்டவர்கள். மக்களுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள். தியாக வரலாறு இவர்களுக்கே உண்டு. மக்களுடன் நெருக்கமான அரசியல் உறவைக் கொண்டிருந்தவர்கள். (இப்பொழுது அப்படி உள்ளதா என்பது கேள்வியே) ஆனாலும் மக்களின் மீதான மெய்யான கரிசனை இவர்களை விட்டு நீங்கவில்லை. செயற்பாட்டு அரசியற் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் எங்கே நின்றாலும் எதையாவது செய்து தீர வேண்டும் என்ற விருப்பத்துடன் இருப்பவர்கள் என்பதற்கு மேலும் ஒரு சான்று அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து நின்றாலும் சரி, வெளியே எதிர்த்தரப்பில் நின்றாலும் சரி எதையாவது மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று முயற்சிப்பவர்கள். ஆனால் தமிழரசுக் கட்சியினரிடம் இந்தக் குணமில்லை. அவர்கள் தங்களுடைய தேவைகள், நலன்களை மிகச் சாதுரியமாகச் செய்து கொள்வார்கள். மக்களைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். இதை ஆதரத்துடனேயே இங்கே முன்வைக்கிறேன். எளிய, அண்மைய சான்று கடந்த ரணில் விக்கிரமசிங்க மைத்திரிபாலசிறிசேன ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்துக்கு இணக்கமாக தமிழரசுக் கட்சி செயற்பட்டது. இருந்தும் அது மக்களுக்கு உருப்படியாக எதையும் செய்யவில்லை. அப்படித்தான் முன்னரும். என்பதால் தான் இந்த உடைவு தவிர்க்க முடியாமல் நிகழ்ந்திருக்கிறது. இது வரலாற்று விதியின் விளைவு.

பாவனைப் போர் வீரர்களும் செயல் வீரர்களும் ஒன்றாக நீண்ட காலம் பயணிக்க முடியாது என்பதே இதற்கான காரணமாகும். ஆகவே இந்தத் தெளிவான வரலாற்று விதியை மக்கள் புரிந்து கொள்வது அவசியம். இன்று இந்தப் பிரிகோடு துலக்கமாகி விட்டது. இனியும் எதற்காகவும் சமரசம் செய்ய முடியாது என்ற நிலையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்தது. தமிழரசுக் கட்சி தனித்தது. தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் தான். அது அப்படித் தான் நிகழும். வரலாற்று விதி இதுவே.

இந்த வரலாற்று விதியை அரசியல் ஆய்வாளர்களும் ஊடகத்துறையினரும் புரிந்து கொள்வது அவசியமாகும். இப்பொழுது தாம் எந்தப் பக்கம் நிற்கிறோம் என்பதை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் வரலாற்றின் முன்னே ஆய்வாளர்களுக்கும் ஊடகத்துறையினருக்கும் புத்திஜீவிகளுக்கும் வந்துள்ளது. இதை அவர்கள் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். இனியும் தடுமாற்றங்களுக்குள்ளாகக் கூடாது. இது ஏறக்குறைய 1970 களில் உருவான நிலையே ஆகும். அந்தச் சூழல் மறுபடியும் இப்பொழுது வந்துள்ளது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட வெற்றிடத்தில் தான் தமிழரசுக் கட்சி மீள எழுந்தது. இருந்தாலும் அதன் செயற்பாடற்ற தன்மையும் மேட்டுக்குடி மனப்பாங்கும் அதனை மறுபடியும் தோற்கடிக்கும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. காலம் அப்படித் தான் தன் விதியைக் கொண்டிருக்கும். அதைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. அது தனக்குத் தேவையானதைத் தேர்ந்து கொள்ளும்.

1970கள் வரையிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் மேற்கொண்டு வந்த பாவனைப் போர் அரசியல் 1970 களின் இறுதியில் வெளுத்தது. செயலின்மையை மறைப்பதற்கே இவை இனவாதத்தைப் பயன்படுத்துகின்றன. இதனால் தான் அது எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் காலத்திலேயே காலாவதியாகப் போக வேண்டிய நிலைக்குள்ளாகியது. தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று செல்வநாயம் மக்களைப் பார்த்துக் கைவிரிக்க வேண்டிய நிலை வந்தது அதனுடைய அரசியல் முறைமையினாலேயே. இல்லையெனில் ஒரு தலைவர் தன்னுடைய மக்களுக்குச் சரியான வழியைக் காட்டுவதற்குப் பதிலாக கடவுள் தான் இனி உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கையை விரிப்பாரா? அது ஒரு தலைவருக்கும் ஒரு தலைமைக்கும் அழகாகுமா?

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



கடவுள் காப்பாற்ற மாட்டார். நாம் தான் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று எழுந்த இளைஞர் படை தான் பின்னர் வந்த காலத்தில் மக்களைப் பாதுகாத்தது. செயற்பாட்டு அரசியலை முன்னெடுக்கும் போராளிகள் எழுச்சியடைந்தனர். திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நில ஆக்கிரமிப்பை இளைஞர் இயக்கங்களே தடுத்து நிறுத்தின.

அவைதான் தமிழ் மொழிச் சமூகத்தினருக்கு எதிரான அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை முறியடித்துத் தாம் ஒரு புதிய நிகழ்ச்சி நிரலை உருவாக்கின. பேச்சு வார்த்தை மேசையை நோக்கி வர வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்துக்கு உருவாக்கியது போராளிகளே யாகும். மாவட்ட அபிவிருத்திச் சபையே போதும் என்ற அளவில் தம்முடைய அரசியல் கோரிக்கையை சுருக்கிக் கொண்ட தமிழரசுக் கட்சி தமிழ்க்காங்கிரஸ் தமிழர் விடுதலைக் கூட்டணியை நிராகரித்து விட்டு அதற்கப்பால் பயணித்தது இளைஞர் இயக்கங்களே. அதன் விளைவே இன்றுள்ள மாகாணசபையாகும். இது கூடப் போதாதென்றே தொடர் போராட்டம் நிகழ்த்தப்பட்டது. அவைதான் தமிழ் மக்களின் பிரச்சினையை பிராந்திய, சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றன. போராளிகள் உருவாக்கிய அரசியல் அடித்தளமே இன்றுள்ளதாகும். காரணம், செயற்பாட்டு அரசியலே மக்களுக்குத் தேவையாக இருந்தது. இந்த அணிகளின் வரலாற்றுத் தவறுகள் காரணமாகவும் சந்தர்ப்பவசமாகவும் தமிழரசு இதற்குள் புகுந்து நிற்கிறது. நின்றுகொண்டு தன்னை விரிவாக்கிக் கொள்ள முயற்சிக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் நடந்தது இந்த மோதல் தான் என்பது தெளிவு. செயற்பாட்டுத் தரப்பினருக்கும் பாவனைப் போர்த் தரப்பினருக்குமிடையிலான இழுபறிகள். இறுதியில் இதற்கான இடமில்லை என்ற நிலையில் தமிழரசுக் கட்சி தனித்து விடப்பட்டதும் ஏனைய அணிகள் ஒன்றிணைந்ததும் இதனால் தான். வரலாற்று விதியின்படி பொருத்தமற்றதைக் காலம் கழித்தே தீரும். அதுவே நிகழ்ந்துள்ளது. (22ம் பக்கம் பார்க்க)

# இலங்கை இன்னமும் கண்டு பிடிக்காமல் இருக்கும் ஒரு தலைவர்

கோட்டா வீட்டுக்கு போ என்பதே கடந்த வருடம் இலங்கை கண்ட மக்கள் போராட்டத்தின் (ஜனதா அரகலய) பிரதான முழக்கமாகும். அத்தியாவசியப் பொருட்களுக்கு நிலவிய கடுமையான தட்டுப்பாடு மற்றும் நீண்டநேர மின்வெட்டு ஆகியவற்றுக்கு எதிராக வீதிகளுக்கு இறங்கிய ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது துயரங்களுக்கெல்லாம் நாட்டின் மிகவும் பலம் பொருந்திய தலைவரையே முற்று முழுதாக குற்றஞ் சாட்டினர். ஆட்சி சாய்வதற்கோ அல்லது நாட்டின் உயர்பதவியை வகிப்பதற்கோ முன்னாள் இராணுவ அதிகாரியை தகுதியற்றவர் என்று கருதிய மக்கள் அவரை அதிகாரத்தில் இருந்து வெளியேற்றியதை காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளை போராட்ட இயக்கத்தின் பகுதியாக விளங்கிய சிலர் இன்னொரு கேள்வியை எதிர்கொண்டனர். தோல்வி கண்ட ஜனாதிபதியொருவரை வெளியேற்றுவது மாத்திரம் நாட்டுக்கு தேவைப்படுகின்ற 'முறைமை மாற்றத்தை' கொண்டு வருமா? கோட்டாபய ராஜபக்ச 2021ஆம் ஆண்டில் இரவோடிரவாக கொண்டு வந்து இன்னமும் கூட விவசாயிகளையும் வருடாந்த பயிர் விளைச்சலையும் பாதித்துக் கொண்டிருக்கின்ற இரசாயனப் பசளை தடை போன்ற நாசகாரத்தனமான கொள்கைத் தெரிவுகளை அவரின் இடத்தில் இருக்கக்கூடிய இன்னொரு தலைவர் நாடினால் என்ன ஆகும்? சிந்திக்காமல் செயற்பட்ட ஒரு தலைவர் மாத்திரமல்ல பிரச்சினை என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். ஒரு தனிநபர் மீது தங்குதடையற்ற அதிகாரங்களை குவிக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியே உண்மையில் பெரிய பிரச்சினை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை மீது கவனம் திரும்பியது. அதை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை உரத்து ஒலிக்கத் தொடங்கி சிறிதுகாலம் பொதுவிவாதத்தை ஆக்கிரமித்தது.

## மட்டு மீறிய அதிகாரங்களின் மூலங்கள்

ஆனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கைக்கு வழக்கமீறிய அல்லது பழக்கமற்ற ஒன்றாக இருக்கவில்லை. அது புதிதானதாகவும் இருக்கவில்லை. 1978ஆம் ஆண்டில் அந்த ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பிறகு பதவிக்கு வந்த ஒவ்வொரு ஜனாதிபதியும் அதை ஒழிப்பதாக உறுதியளித்திருந்தாலும், பதவியில் அமர்ந்ததும் அதன் அதிகாரங்களை அனுபவிப்பதில் இருந்து விடுபட முடியாமல் உறுதிமொழியை வசதியாக மறந்து விட்டனர்.

1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதில் இருந்து இலங்கை பாராளுமன்ற ஜனநாயக நாடாக விளங்கியது. 1972 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு அரசியலமைப்பிலும் பாராளுமன்ற ஜனநாயகமே தொடர்ந்தது. 1978ஆண்டில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்தி ஜனாதிபதிக்கு மிகவும் பேரளவான அதிகாரங்களை வழங்கியது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன எதிர்க்கட்சியில் இருந்த போது 1970களின் ஆரம்பத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை கொண்டு வரவேண்டும் என்ற யோசனையைக் கொண்டிருந்தார். அந்த நாட்களில் இருந்தே அந்த யோசனைக்கான எதிர்ப்பு இலங்கையின்



அரசியல் சமுதாயத்திற்குள்ளும் சிவில் சமுதாயத்திற்குள்ளும் இருந்தது. இதில் விசேடமாக இடதுசாரிகள் பிரதான பங்கை வகித்தார்கள். அது தொடர்பிலான முக்கிய விவாதங்களை மூத்த அரசியலமைப்பு சட்டவாதியான கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்ன சில வருடங்களுக்கு முன்னர் ஊடக கட்டுரைகளில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ரொட்ஸ்கியவாத லங்கா சமசமாஜ கட்சியின் தாபக தலைவர்களில் ஒருவரும் எமது பிராந்தியத்திலேயே மிகவும் சிறந்த பாராளுமன்றவாதிகளில் ஒருவருமான கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியின் ஆபத்துக்களை 1971ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணயசபையில் மணிச்சுருக்கமாக விளக்கினார்.

அந்த நேரத்தில் அரசியலமைப்பு விவகார அமைச்சராக இருந்த அவர், `பாராளுமன்ற ஆட்சி முறைமையில் சந்தேகத்திற்கிடமின்றி ஒரு நன்மை இருக்கிறது. நிறைவேற்று அதிகார பதவியில் இருக்கின்ற பிரதமர் மக்களின் பிரதிநிதிகளுக்கு நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியவராக இருக்கிறார். பாராளுமன்றத்தின் நம்பிக்கையை கொண்டிருக்கும் வரையில் தான் அவர் பிரதமர் பதவியில் தொடர முடியும். ஜனாதிபதிகளோ அல்லது பிரதமர்களோ மக்களினதும் எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் பிரதிநிதிகளினதும் விருப்பங்களுக்கும் கருத்துக்களுக்கும் முரணாக தங்களது சொந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நாம் விரும்பவில்லை. மக்களுக்கு எதிராக பலம் பொருந்திய ஒரு தலைவர் இருப்பதில் எந்த நன்மையும் இல்லை என்று வாதிட்டார்.

திறந்த பொருளாதார சீர்திருத்தங்களுடன் கூடிய பொருளாதார முன்னேற்றத்தை கொண்டு வருவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்த ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி 1977 பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் மாபெரும் வெற்றி பெற்றபோது இடதுசாரிகள் பாராளுமன்றத்தில் இருந்து தடைதெறியப்பட்டனர். இருந்தாலும் இடதுசாரி அரசில்வாதிகள் பாராளுமன்றத்துக்கு வெளியில் இருந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராக தொடர்ந்து இயக்கத்தை முன்னெடுத்தனர்.

சமசமாஜ கட்சியின் தலைவரான என்.எம். பெரேரா 1978 அரசியலமைப்பை கடுமையாக கண்டித்த கட்டுரைகளை எழுதினர்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் ஆட்சி

எவ்வாறெனினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஜெயவர்தன ஆட்சியின் கட்டமைப்பில் விரைவாகவே வலுவுன்றியது. தனது குறிக்கோள்களுக்கு தேவையான சகல அதிகாரங்களையும் புதிய ஜனாதிபதி அந்த முறைமையில் கண்டு கொண்டார். பதவியேற்று இரு வருடங்களில் ஜெயவர்தன 1980 பொதுவேலை நிறுத்தத்தை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொடூரமாக அடக்கி அரசாங்க சேவையைச் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் ஊழியர்களை பதவி நீக்கினார். அதே அதிகாரங்களுடன் ஜனாதிபதி ஜெயவர்தன மூன்று வருடங்கள் கழித்து 1983 ஜீலையில் நாடு பூராவும் தமிழர்களுக்கு எதிராக சிங்கள குண்டர்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான இனவன்செயல் அடக்குவதற்கு எதையும் செய்யவில்லை. அவர் ஆதரித்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட அந்த வன்செயல் நாட்டை மூன்று தசாப்த காலம் சின்னாபின்னப்படுத்திய உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது. அதில் ஆயிரக்கணக்கான குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து வந்த தசாப்தங்களில் ஆறு ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் அனைவருமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதாக மக்களுக்கு வாக்குறுதியளித்தே தேர்தல்களில் வெற்றி பெற்றனர். அந்த பதவியை ஒழிப்பதாக யோசனை முன்வைத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் இறுதியில் அவர் அதை ஒழிக்கவில்லை.

மேலும், தேர்தல் வாக்குறுதியை மீறுவதை வழக்கமாகக் கொண்டிருந்ததற்கு அப்பால் ஜனாதிபதி பதவிக்கு வந்த தலைவர்கள் தங்களுக்கு இருந்த மட்டு மீறிய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ததை காணக்கூடியதாக இருந்தது. உண்மையில் அந்த பதவியை மேலும் கூடுதலான அதிகாரங்கள் கொண்டதாக வலுப்படுத்துவதற்கே அவர்கள் நாட்டம் கொண்டு செயற்பட்டார்கள்.

உள்நாட்டுப் போரில் விடுதலை புலிகளை இராணுவரீதியாக தோற்கடித்த பிறகு அந்த போர் வெற்றியை ` பிரதான பிரசாரமாக சிங்கள வாக்காளர்கள் முன்னிலையில் வைத்து 2010 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கு தெரிவான மகிந்த ராஜபக்ஷ சில மாதங்களில் அரசியலமைப்புக்கான 18 வது திருத்தத்தைக் கொண்டு வந்தார். அந்த திருத்தம் அதுகால வரையில் ஜனாதிபதிகளுக்கு இருந்த இரு பதவிக்கால மட்டுப்பாட்டையும் நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு இருந்திருக்கக்கூடிய தடுப்புக்களையும் சமப்படுத்தல்களையும் (Checks and balances) நீக்கியதன் மூலம் ஜனாதிபதி பதவியை மேலும் பலம் கொண்டதாக்கியது.

## பாராளுமன்றத்துக்கு அதிகாரமளித்தல்

ஆனால் இந்த போக்குகளில் இருந்து ஒரு வரவேற்கக்கூடிய அரிதான விலகலாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி

கட்டுரையாளர்
இந்தியாவில் இருந்து
- மீரா.ஸ்ரீனிவாசன் -



சேனவின் பதவிக் காலத்தால் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவைக் கொண்ட அரசாங்கம் அரசிலமைப்புக்கான 19 வது திருத்தத்தை நிறைவேற்றியது.

அதுவே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்தை வலுப்படுத்துவதற்கு அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்ட முதல் சந்தர்ப்பமாகும். அவ்வாறு இருந்த போதிலும் ஜனாதிபதியிடம் எஞ்சியிருந்த அதிகாரங்கள் 2018 பிற்பகுதியில் பிரதமர் பதவியில் இருந்து விக்கிரமசிங்கவை திடீரென்று நீக்கி ஒரு ஐம்பது நாட்களுக்கும் அதிகமான அரசியலமைப்பு நெருக்கடியை உருவாக்கக்கூடிய அளவுக்கு சிறிசேனவுக்கு நம்பிக்கையைக் கொடுத்தன.

ஜனாதிபதியின் நடவடிக்கை சட்ட விரோதமானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. அந்த வழக்கில் சட்டத்தரணிகள் தங்களது வாதத்தை பிரதானமாக 19வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டே முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2019நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச பெருவெற்றி பெற்றார். ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்துக்குள் அவரது அரசாங்கம் 19வது திருத்தத்தை இரத்துச் செய்து 20வது திருத்தத்தைக் கொண்டு வந்து முன்னர் குறைக்கப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மீட்டெடுத்தார்.

2022 செப்டம்பரில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் நிர்வாகம் 19வது திருத்தத்தில் இருந்த ஏற்பாடுகளை மீளக் கொண்டு வருவதாகக் கூறிக்கொண்டு 21வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. ஆனால் அதை ஒரு கண்துடைப்பு என்று விமர்சகர்கள் நிராகரித்தார்கள். ஜனாதிபதி பதவியை கட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் அவர்களின் அனுபவத்தில் பயனற்றவையாகவே போயிருப்பதை காணக் கூடியதாக வுள்ளது. ஜனாதிபதியிடம் அளவுக்கும் அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்படுவதை அனுமதிக்கின்ற இந்த ஆட்சி முறை மறுசீரமைப்புகளுக்கு இடந்தராது என்பதால் அதை முற்று முழுதாக மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும் என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

இப்போதும் கூட ஜனாதிபதி எத்தனை அமைச்சுப் பொறுப்புக்களை தன்வசம் வைத்திருக்கலாம்.ஆனால் அவ்வாறு செய்வதை மட்டுப்படுத்துவதற்கு 19 வது திருத்தம் முயற்சித்தது. அமைச்சுக்களினதும் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கான அதிகாரங்களை இன்னமும் ஜனாதிபதி கொண்டிருக்கிறார். அமைச்சர்களுக்கான பொறுப்புக்களையும் கடமைகளையும் தீர்மானிக்கக் கூடியவராக இருக்கிறார். அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பதற்கு தனது தற்துணிவு அதிகாரத்தை அவரால் பயன்படுத்த முடியும். சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து அவற்றை கண்காணிக்கும் அரசியலமைப்பு பேரவையின் சுயாதீனம்

(22ம் பக்கம் பார்க்க)

# உருவாகும் எரிபொருள் கேந்திரப் போட்டி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



கடந்த ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு, சீனாவில் இருந்து இரண்டு வர்த்தக குழுக்கள் முதல்முறையாக கொழும்பு வந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று சினோபெக் (Sinopec) அல்லது சீன பெட்ரோகெமிக்கல் நிறுவனம் எனப்படும், சீனாவின் பாரிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிறுவனமாகும்.

இதுவே உலகின் மூன்றாவது பெரிய இரசாயன நிறுவனமாகவும் விளங்குகிறது. இது மிகப்பெரிய எண்ணெய் மற்றும் பெற்றோ கெமிக்கல் பொருட்களின் விநியோகஸ்தராகவும், சீனாவில் இரண்டாவது பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியாளராகவும் இருக்கிறது. இந்த நிறுவனத்தின் உயர் மட்டக் குழுவொன்று கொழும்பு வந்து கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருக்கிறது.

இதன் போது அம்பாந்தோட்டையில், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றில் முதலீடு செய்வதாக சினோபெக் நிறுவனம் வாக்குறுதி அளித்திருக்கிறது. இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவு, அந்த முதலீட்டின் அளவு எவ்வளவு என்பதை குறிப்பிடவில்லை. இதிலிருந்து, இந்த முதலீட்டுத் திட்டம், இன்னமும் கொள்கை அளவிலான இணக்கப்பாட்டில் தான் உள்ளது. இன்னமும், தீர்க்கமான இணக்கப்பாடும் அப்போது செய்து கொள்ளப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர், இரண்டு நாடுகளும் அதில் ஆர்வம் காட்டவில்லை. அல்லது வேறு தடைகளை சந்திக்க வேண்டியிருந்தது. இலங்கையின் தரப்பில் அப்போது போடப்பட்ட தடைகளும் இந்தியா இந்த திட்டத்தை செயற்படுத்தாமல் போனதற்கு காரணம்.



கோட்டா அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், எரிசக்தி அமைச்சராக இருந்த உதயகம்மன்பில, இந்தியாவிடம் இருந்து எண்ணெய் தாங்கிகளை பிடுங்கிக் கொள்வதில் கவனம் செலுத்தினாரே தவிர, ஆசியாவின் எண்ணெய் கேந்திரங்கள் இல்லை. இந்தியாவுக்கு திருகோணமலைத் துறைமுகத்தின் மீது அக்கறை உள்ளது. அது தனது கையை விட்டுப் போய் விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறது. இவ்வாறான நிலையில், சீனக்குடா எரிபொருள் தாங்கிகளை கையில் வைத்துக் கொண்டிருந்தால், எவராலும் எதையும் செய்துவிட முடியாது.

அதனை மீறி யாரேனும் கை வைக்க முயன்றாலும் இந்தியா தனது பலத்தை பிரயோகிக்கும். விடுதலைப் புலிகளின் இறுதிக்கட்டப் போர் வியூகத்தில், திருகோணமலை மீது அவர்கள் கொடுத்த நெருக்கடியும், இந்தியா

அது போலவே அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்திருக்கின்ற சீனாவுக்கு, அதனைச் சுற்றி ஒரு பொருளாதார வலயம் தேவைப்படுகிறது. அங்கு 15 ஆயிரம் ஏக்கரில் கைத்தொழில் வலயம் ஒன்றை உருவாக்க முயன்றது சீனா. அதற்காக நிலங்களை கையகப்படுத்த முயன்ற போது, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டது. ,தனால் அந்த திட்டம் இன்னமும் கிடப்பில் தான் உள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அதன் ஊடான செயற்பாடுகள் தங்கு தடையின்றி மேற் கொள்ளப்படுவதற்கும், எண்ணெய் சேமிப்பு வசதி முக்கியம். துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கான எரிபொருளுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையோ லங்கா ஐ.ஓ.சியையோ நம்பியிருக்க முடியாது.

எனவே, அம்பாந்தோட்டையில் சீனா ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க திட்டமிடுகிறது. ஏற்கனவே இந்த திட்டம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. இப்போது அந்த திட்டம் விரைவு படுத்தப்பட வாய்ப்பு உள்ளது. ஏனென்றால் இலங்கையில் முதலீடு செய்வதில், ஆதிக்கம் செலுத்துவதில் இந்தியாவுடன் சீனா அதிகம் போட்டியிடுகிறது. இந்த பூகோள அரசியல் போட்டி தான், இலங்கைத்தீவில் இரண்டு எண்ணெய் கேந்திரங்களை உருவாக்கும் முயற்சிகள் பற்றி பேசப்படுவதற்குக் காரணம். இலங்கை விரும்பியோ விரும்பாமலோ, முரண்பாடான நிலைப்பாடுகளைக் கொண்ட வல்லரசுகளை இழுத்து வைத்துக் கொள்ள முனைகிறது. இதன் மூலம், சமநிலையான உறவைப் பேணுவதாக காட்டிக் கொள்ளவும் முற்படுகிறது. ஆனால், இது தேவையற்ற சர்வதேச அரசியல் போட்டிக்குள் இலங்கையை மீண்டும் இழுத்துச் செல்வதாகவே தோன்றுகிறது.

கட்டத்தை எட்டவில்லை என்பதையும், திட்டமிடல்கள் நிறைவடையவில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும், அம்பாந்தோட்டை முதன்மை எரிசக்தி மையமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சினோபெக் குழுவிடம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 3ஆம் திகதி சீனக்குடாவில் உள்ள விமானப் படை பயிற்சி முகாமில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய விமானப்படை அதிகாரிகளின் அணி வகுப்பை பார்வையிடுவதற்காக, திருகோணமலைக்குச் சென்றிருந்தார். அப்போது சீனக்குடாவில் லங்கா ஐ-ஓசியின் பராமரிப்பில் இருக்கின்ற, இரண்டாம் உலகப் போர் காலத்து, எண்ணெய் தாங்கிகளையும் அவர் பார்வையிட்டிருந்தார்.

குறிப்பாக பல தசாப்தங்களாக கைவிடப்பட்ட நிலையில், பயன்படுத்தப்படாமல் இருக்கும், 61 மேல்நிலை தாங்கிகளைப் பார்வையிட்டு அவற்றை புனரமைத்து விரைவில் மீளப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை செயற்படுத்துமாறு, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

லங்கா ஐ.ஓ.சியின் வசமுள்ள இந்த எண்ணெய் தாங்கிகளை மீளப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலம், எண்ணெய் சேமிப்பு மற்றும் கப்பல்களுக்கான எண்ணெய் விநியோகம், ஏற்றுமதி போன்றவற்றில் ஈடுபட முடியும் என்பது ஜனாதிபதியின் திட்டம்

2015ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது திருகோணமலையை ஆசியாவின் எரிபொருள் கேந்திரமாக மாற்றுவதாக கூறியிருந்தார். இரண்டு நாடுகளும் இணைந்து எண்ணெய் சேமிப்பு வசதிகளை அதிகரிப்பது தொடர்பான

மாக அதனை உருவாக்குவதில் அக்கறை செலுத்தவில்லை. கடந்த ஆண்டு எரிபொருள் நெருக்கடி ஏற்பட்ட பின்னர், எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிடம் வழங்கி அபிவிருத்தி செய்திருந்தால், எரிபொருள் நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஒருமுறை கூறியிருந்தார்.


இந்தியாவுடன் இணைந்து திரு. கோணமலையை எண்ணெய் கேந்திரமாக மாற்றும் முயற்சிகளை தீவிரப்படுத்த உத்தரவிட்ட 10 நாட்களில், அம்பாந்தோட்டையில் இன்னொரு எண்ணெய் கேந்திரம் பற்றி பேசியிருக்கிறார் ஜனாதிபதி. இலங்கை ஒரு சின்னஞ்சிறிய நாடு. அதில் இரண்டு எண்ணெய் கேந்திரங்கள் அவசியமா? என்ற கேள்வி உள்ளது.

இது சந்தையில் போட்டித் தன்மையை ஏற்படுத்தும் என்ற போதும், மிகையான போட்டி வரும் போது, வெளி நாட்டு முதலீடுகள் வெளியேறும் நிலை ஏற்படலாம். ஏற்கனவே இலங்கையின் பெற்றோலிய சந்தையில், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் வசதிகளே வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே இன்னமும், இந்தச் சந்தையில் கணிசமான செல்வாக்கை செலுத்துகிறது.


இவ்வாறான நிலையில் சீனாவின் சினோபெக் நிறுவனமும் இணைந்து கொள்ளும் போது போட்டி இயல்பாகவே அதிகரிக்கும். அது விலையைக் குறைக்கும் வாய்ப்புகள் இருந்தாலும், முதலீட்டுக்கு ஏற்ற இலாபம் கிடைக்காது போனால், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வதற்கு தள்ளபபடலாம்.

அதேவேளை, வல்லரசுகள் இலங்கையில் எண்ணெய்க் கேந்திரங்களை உருவாக்கும் திட்டங்களுக்குப் பின்னால் வெறும் வர்த்தக நோக்கம் இல்லை. இலங்கையில் இந்தக் கேந்திரங்களில் முதலீடு செய்வதற்கு, இந்தியாவுக்கும் சீனாவுக்கும், முன் வருவதற்குக் காரணம், வர்த்தக வருமான


அவர்களுக்கு எதிராகத் திரும்பியதற்கு ஒரு காரணம். சீனக்குடா எண்ணெய் தாங்கிகளின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படக் கூடாது என்பதில் இந்தியா திட்டவட்டமாக இருந்தது. எதிர்காலத்தில் எந்த தரப்பினர் திருகோணமலையின் மீது கை வைத்தாலும், அதே நிலை தான் ஏற்படும்.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்வது நல்லது.



ரிஷபராசி அன்பர்களே! எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். எதிலும் அவசரப்படாமல் இருப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய் வழி உறவினரால் உதவிகள் கிடைக்கும்.




மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மன தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். வீண் அலைச்சலும், எதிர்பாராத செலவும் உண்டாகும். குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும்




கடகராசி அன்பர்களே! பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். வெளியூர் செல்ல நேரலாம்.



சிம்மராசி அன்பர்களே! நீங்கள் நல்லதாக பேசினாலும், எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. சூரியன் சஞ்சாரத்தால் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை தீரும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும்.



கன்னிராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. உத்தியோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கலாம். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.




துலாம் ராசி அன்பர்களே! புத்திக் கூர்மையுடன் செயல்களை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும். மனதுக்கு பிடிக்காத இடத்திற்கு சென்று வரவேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக திடீர் பயணங்கள் ஏற்படும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். வீண் குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினருடன் வாக்குவாத த்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது.



விருச்சிகராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாக நடந்து முடியும். செயல்திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் யோகநிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். விவசாயம், ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.






தனுசுராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்து செய்ய வேண்டியது அவசியம். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை பற்றிய கவலை நீங்கும். நிர்வாகத்தின் ஆதரவும் இருக்கும்.



மகரராசி அன்பர்களே! பலராலும் செய்ய முடியாத காரியங்களைவெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வாக்கு வன்மையால் எளிதாக தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்க பெறுவர். பிரச்னைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு ,கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவர். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.



கும்பராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புதுவியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம் கவனம்.



மீனராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இது நம்ம யாழ்ப்பாணம் 17

(16ம் பக்கத் தொடர்ச்சி) தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்வதற்காக அண்மையில் மில்க்வைற் நிறுவனத்துக்கு சென்ற போது தவகோபாலை சந்திக்க முடியவில்லை. அவர் கனடாவுக்குச் சென்றிருப்பதாக அறிய முடிந்தது. விஜயகோபாலைத் தான் சந்திக்க முடிந்தது. சில முக்கிய மான தகவல்களை விஜயகோபால் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள படகு கட்டும் நிறுவனங்கள் கண்ணாடி இழை தயாரிப்பதற்கு எம்மிடமிருந்து தான் சோப்பை வாங்குகின்றார்கள். கூட்டுறவு அமைப்புக்கள் மருத்துவமனைகள் எம்மிடமிருந்து தான் முன்னர் வாங்கினார்கள். இப்போது நிறுத்தி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் இப்போது தேங்காய் எண்ணையும் விலை உயர்ந்து விட்டது. முன்னர் தென்பகுதிக்குச் சென்று நீர்கொழும்பு போன்ற இடங்களிலிருந்து தேங்காய் எண்ணெயை வாங்கினோம். இப்போது போக்குவரத்து செலவீனங்கள் அதிகரித்திருப்பதால் அவ்வாறு செய்ய முடியவில்லை என்று விஜயகோபால் தெரிவித்தார்.

முன்னர் பாவித்த இயந்திரங்கள் சில செயற்படவில்லை. நீண்ட காலமாக சுமார் 30 வருடங்களாக அவை பயன்படுத்தப்படாமலிருந்துள்ளன. அவை பயன்படுத்த முடியாதவையாக உள்ளன. ஒரு சில இயந்திரங்கள் இயங்குகின்றன. புதிய இயந்திரங்களை வாங்குவதென்றால் பல கோடி ரூபா தேவைப்படும் எனத் தெரிவித்த விஜயகோபாலிடம் இதற்கு மேலும் சில கோடிகளைச் செலவிட்டால் உற்பத்தியை முன்னர் போல செய்ய முடியுமா? எனக் கேட்ட போது அதற்கேற்ற இலாபத்தைப் பெறக்கூடியதாக இருக்குமா என்பது கேள்விக்குறியாகத் தான் இருக்கும் எனத் தெரிவித்தார்.

தற்போது சோப்பை விட அமிர்தம் என்ற பெயரிலான நெல்லிகிரஷ் கிரேப் ஜீஸ் என்பனவும் தம்மால் தயாரிக்கப்படுவதாகவும் விஜயகோபால் தெரிவித்தார். .

மில்வைற் என்றவுடன் நினைவுக்கு வரும் மற்றொரு விடயம் கனகராஜா முன்னெடுத்த சமூக சேவைகள் தான். அது தொடர்பாகவும் அவர் முன்னெடுத்த பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம் என்ற திட்டத்தின் மூலமாக போர்க் காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பதையிட்டும் அடுத்த வாரம் பார்ப்போம்..

# பாவனைப் போரும் செயற்பாட்டு...

(19ம் பக்கத் தொடர்ச்சி) செயற்பாட்டுத் தரப்பினராகிய குத்துவிளக்கு அணியினர், தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கு கிழக்கிலும் வடக்கிலும் உள்ள மேலும் பொருத்தமான தரப்புகளை உள்ளீர்த்துக் கொள்ள வேண்டும்.

தனித்து நிற்கின்ற தமிழரசுக் கட்சியும் நீண்ட காலத்துக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய நிலையில் இல்லை. ஒன்று, ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளதைப்போல, அது பாவனைப் போரை விட்டு எளிதில் செயற்பாட்டு அரசியலை எளிதில் முன்னெடுக்கும் என்று தெரியவில்லை. அடுத்தது, அதன் கட்டுக்கோப்பில் உள்ள தளர்வும் நோய்க் கூறுகளுமாகும். அதனிடத்தில் உள்ள அரசியல் குழப்ப நிலையும் பதவி ஆசையும் அதைச் சிதைத்தே தீரும். மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்தாலும் அவருடைய கட்டுப்பாட்டையும் நெறிப்படுத்தலையும் இழந்த நிலையில் தான் தமிழரசுக் கட்சி உள்ளது.

இனி இதை (தமிழரசுக் கட்சியை) மக்களும் கழித்து விட வேண்டும். இல்லையேல் மக்களுக்கு அதுவே தண்டனையாகும். நீங்கள் தேவையற்ற எந்தப் பொருளை வைத்திருந்தாலும் அது கழிவாகும். கழிவு குப்பையாகவே இருக்கும். குப்பையை எரிக்க வேண்டும். அல்லது புதைத்து விட வேண்டும். இல்லையென்றால் அதனால் உங்களுக்குப் பாதிப்பே ஏற்படும். பொருத்தமில்லை, பயனில்லை என்றால் நாமே நட்டு வளர்த்த தென்னையையோ மாமரத்தையோ நாம் வெட்டி நீக்கி விடுவதில்லையா, அதைப் போலத் தான் தயக்கமில்லாமல் அதை நீக்கி விட வேண்டும். இல்லையென்றால் அதனால் நமக்கே பாதிப்பு.

# தமிழரின் அரசியலை வழி நடத்தும்..

(17ம் பக்கத் தொடர்ச்சி) கொள்கையில் தாக்கம் செலுத்தும் விடயங்களல்ல. எனவே விடயங்களை நோக்கினால், இவ்வாறான எதிர்பார்புக்களும், அந்த எதிர்பார்ப்புக்கள் மீதான எதிர்வு கூறல்களும் முற்றிலும் சரியானதல்ல. இவற்றுக்கான வாய்ப்புக்கள் என்பது, பெரும்பாலும் அதிஸ்டத்தை நம்புவது போன்றது. ஒரு இனத்தின் அரசியல் போக்கை இவ்வாறு அணுகுவது சரியானதா? கடந்த காலம் நமக்கு தந்திருக்கும் படிப்பினைகள் எவையுமே இவ்வாறான விடயங்கள் மீது நம்பிக்கை வைப்பதை சந்தேகத்துடன் நோக்குமாறுதான் வற்புறுத்துகின்றது.

முதலில் நாம் ஏதாவதொரு வகையில் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். அதற்கு நமக்கு ஏதாவதொரு கட்டமைப்பு தேவைப்படுகின்றது. அவ்வாறில்லா விட்டால், நமது நிலைமையானது, பேச்சு பல்லக்கு தம்பி பொடிநடை என்பதாகிவிடும். கடந்த 13 வருடங்களாக, நமது காலம், பல்லக்கு பேச்சுக்களில் தான் கழிந்திருக்கின்றது. இது சுகமானது ஆனால் மக்களுக்கு பயனற்றது.

(20ம் பக்கத் தொடர்ச்சி) இங்கு கேள்விக்குள்ளாகிறது. மத்தியில் சகல அதிகாரங்களையும் அதுவும் ஒரு பதவியில் குவிப்பதன் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை மாகாண மட்டத்தில் ஆட்சிமுறையின் வீச்செல்லையை கடுமையாக மட்டுப்படுத்துகிறது. மாகாண நிருவாகங்களின் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுக்குள் கூட ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநரே கணிசமான அதிகாரங்களைக் கொண்டவராக இருக்கிறார். இலங்கையின் 1978 அரசியலமைப்பின் கீழான அரசாங்க முறைமை 'பாராளுமன்ற ஜனநாயகம் என்ற போர்வையில் அரசியலமைப்பு ரீதியான ஜனாதிபதியின் சர்வாதிகாரம்' என்று கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா வர்ணித்தார்.

இடையறாத பொருளாதார இடர்பாடுகளுக்கும் சிக்கன நடவடிக்கைகளுக்கும் எதிராக தொழிற்சங்கங்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அடிக்கடி ஆர்ப்பாடடங்களில் ஈடுபடுவதை இப்போது காணக்கூடியதாக இருக்கிறது. பொலிசார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்ப்பீரங்கி தாக்குதல்களை நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கிறார்கள். ஜனாதிபதி விக்கிரமசிங்கவை விமர்சகர்கள் ஏற்கெனவே அவரின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் ஒப்பிட்டிருக்கிற்ர்கள்.

இலங்கை பல தசாப்தங்களாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டிய தேவை குறித்து விவாதித்து வந்திருக்கிறது. கடந்த வருடத்தைய நெருக்கடியும் இந்த ஆட்சிமுறை மீது மீண்டும் கவனத்தைக் குவித்தது. ஆனால் ,ஜனாதிபதி பதவிக்கு வந்து பிறகு தனது சொந்த அதிகாரங்களை துறந்து விடுவதற்கு இணங்கக்கூடிய ஒரு தலைவரை இலங்கை இன்னமும் கண்டு பிடிக்கவில்லை. (த இந்து)

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.